கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

மாதம் இருமுறை

1-4-1973


30 காசு





தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள...
நீயும் ஏன் திருப்பி அடிக்க வில்லை? நீ தற்காப்பு செய்து கொள்ளக் கற்க வேண்டும்.
அல்லது அடியை மணிக்கட்டால் தடுக்கலாம்.
முன்கையால் அல்லது தோளால் தாக்குதலைத் தாங்கிக்கொள்ளலாம்.
ஓ! தினந்தோறும் காலையில் துலக்குகிறேனே, அப்பா!
வா, நாமிருவரும் போர்ஹென்ஸ் பற்பசையால் பல் துலக்குவோம்.
சரி, அப்பா.
Forhan's
FOR THE GUMS
போர்ஹென்ஸ்
பல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப் பட்ட பற்பசை.

கோகுலம்

மலர் 1 :: இதழ் 25
ஏப்ரல் 1, 1973
பரிதாபி, பங்குனி 19






மினி

உயிர்களிடத்து அன்பு
வேண்டும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்

— பாரதியார்

மணி




சந்தா விவரம் :

தனிப் பிரதி
விலை 30 காசு

ஒரு வருடம்	ரூ.	7–00
ஆறு மாதம்	ரூ.	3–50
வெளி நாடுகள்	ரூ.	18–00

அட்டைப்படம் : அந்தப் பெண் ஏன் மத்தளம் தட்டுகிருள்? உள்ளே இருக்கிறது ஒரு கதை!

வண்ணப்படம் : எம். எஸ். செந்தாராஜன்



கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்தவாரியார்

நாரதர் வந்தார்

பிரம்ம முனிவராகிய நாரதா ஒரு நாள் மதுரையைக் கொடுங்கோல் செலுத்தி அரசு புரிகிற கம்சனிடம் சென்றார். கம்சன் நாரதரை வரவேற்று வணங்கி உபசரித்தான்.

நாரதர், ''கம்ச மன்னனே! உன்னுடைய ஆட்சி எங்கும் இல்லாதவண்ணம் காட்சி தருகின்றது. அன்றொரு நாள் அசரீரி கூறிய வார்த்தை உனக்கு நினைவில் நிற்குமே? உன்னைக் கொல்லத் தேவி சசிதேவியின் திருவுதரத்தில் பிறந்தவன் கிருஷ்ணன். வசுதேவர் கிருஷ்ணனை இரவில்கொண்டு போய்க் கோகுலத்தில் நந்தகோபன் மனைவி யசோதையிடம் சேர்த்தார். யசோதையிடம் பிறந்த மாயா தேவியை இங்கு கொணர்ந்தான். அந்த மாயை வானில் மறைந்ததை நீ அறிவாய். தேவியின் ஏழாவது கரு, விஷ்ணு மாயையால் ரோகிணி வயிற்றில் சேர்ந்து பலராமனுகப் பிறந்து வளர்கின்றான். நீ அனுப்பிய பல அசுரர்களை ராமனும் கிருஷ்ணனும் வதைத்தார்கள். இப்போது அரிஷ்டாசுரனையும் அழித்தார்கள். இனி உன்னை அழிப்பார்கள். நீ இதனை உணர்ந்து உய்யும் வழியைத் தேடிக்கொள்'' என்று கூறி மறைந்தார்.

கம்சன் இதனைக் கேட்டு ஆலகாலம் போல் சீறினான். ''இந்தக் கிழவன் வசுதேவன் என்னை வஞ்சித்து விட்டான்'' என்று கூறி அவரை வெட்ட வாளை ஓங்கினான். அவன் கரம் அப்படியே ஸ்தம்பித்து விட்டது. ''ஆ! ஆ! இது என்ன விபரீதம்! இப்போதே இந்த வசுதேவனையும் தேவகியையும் சிறையில் அடைத்து இடர் புரியுங்கள்'' என்றான். அதன்படி வசுதேவரையும் தேவகியையும் அடைத்து அல்லல்புரிந்தார்கள்.

கம்சன் தன் அரசவையில் உள்ளவர்களைப் பார்த்துக் கூறுகின்றான் : ''அமைச்சர்களே! என்னைக் கண்டு மண்ணும் விண்ணும் நடுங்குகின்றன. நான் என் தந்தை உக்கிரசேனரையும், அவர் தம்பி தேவகனையும் சிறைப்படுத்தியுள்ளேன். தேவரும் முனிவர்களும் என்னைக் கண்டு அஞ்சி ஓடி ஒளிந்து விட்டார்கள். கோகுலத்தில் வாழ்கிற பலராமனும் கிருஷ்ணனும் பாலும் தயிரும் வெண்ணெயும் உண்டு தருக்குற்று, என்னை மதியாது திரிகின்றார்கள். அவர்களை அழைத்துக் கொல்லுவேன்.''

சாணூரன், முஷ்டிகன் என்ற மாமல்லர்களை அழைத்து, ''பேராற்றல்

படைத்த மல்லர்களே! இங்கே ராமனும் கிருஷ்ணனும் வருவார்கள். நீங்கள் வாசலில் நின்று கண்டெலியை அடித்துக் கொல்வது போல் அவர்களைக் கொல்லுங்கள்'' என்றான்.


சாணூர முஷ்டிகர்கள் சபையின் வாசலில் இரு மலைச் சிகரங்களைப்போல் நின்றார்கள்.

கம்சன் யானைப் பாகனை அழைத்து, ''நீங்கள் குவலயா பீடம் என்ற எனது பட்டத்து யானைக்கு மதம் ஏற்றி, வாசலின் முன் நிறுத்தி அதன் தும்பிக்கையில் இரும்பு உலக்கையைக் கொடுத்துக் கிருஷ்ணனைக் கொல்லச் செய்யுங்கள்'' என்றான்.

''கிருஷ்ணன் யானையால் கொல்லப் படட்டும். அதற்கும் தப்பினால் சாணூர முஷ்டிகர்கள் கொல்லட்டும். அப்புறம் தப்பி உள்ளே வந்தால், உலாசுரனை இந்திரன் வதைத்தது போல் அச்சிறுவர்களை நான் வதைத்து ஒழிப்பேன். என் தோழர்களாகிய சிசுபாலனையும் துரியோதனனையும், தந்தவக்ரனையும், என் மாமனாராகிய ஜராசந்தனையும் வாழ வைப்பேன். ஏனைய அரசர்களைத் தாழ வைப்பேன்'' என்று கூறித் தோள் குலுங்கச் சிரித்தான் கம்சன்.

பரம பக்த சிகாமணியாகிய அக்ரூரரை அழைத்தான். அவரை அன்புடன் உபசரித்தான். ''என் அன்புக்கு உரிய அக்ரூரரே! நீர் எனக்கு இந்த உதவியைச் செய்ய வேண்டும். நாளை இங்கு தனுர் வேள்வி நடக்க இருக்கின்றது. அதற்கு நந்தகோபன் முதலிய சிற்றரசர்களை வருமாறு அழைத்துவிட்டு வாரும். அவர்கள் தரும் கப்பங்களைப் பெற்று, இராமனையும், கிருஷ்ணனையும் ஒரு தேரில் ஏற்றி கொண்டு வாரும். இப்போதே புறப்படும்'' என்று விநயமாகச் சொன்னான்.

அக்ரூரர் பகவானுடைய தரிசனம் கிடைக்கும் என்று கருதிக் கோகுலத்தை நாடிப் புறப்பட்டுச் சென்றார். (தொடரும்)



தேச தேசக் கதைகள் (கொரியா)

மத்தளம் கொட்டிய மங்கை

வாண்டு மாமா

தலைநகரத்துக்கு அருகில் ஒரு பெரிய எரிமலை இருந்தது. அந்த எரிமலையில் ஒரு கொள்ளிவாய்ப் பிசாசு வாழ்ந்து வந்தது. நெருப்பு டிராகன் என்றும் அதைக் கூறுவார்கள். அதற்கு எப்போதும் அகோரப் பசிதான். எதையும் தின்று கபளீகரம் பண்ணி விடும். அதன் மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் 'குப் குப்' என்று தீ ஜ்வாலை வந்து கொண்டே இருக்கும்.

ஒரு நாள் தனது இருப்பிடமான எரிமலையிலிருந்து எட்டிப் பார்த்தது டிராகன். தலைநகரின் நடுநாயகமாக மன்னரின் புதிய அழகிய அரண்மனை சூரிய ஒளியில் தகதகத்துக் கொண்டிருந்தது. ''அதோ என்னுடைய விருந்து!'' என்று தீ நாக்குகளை நீட்டிச் சுழற்றிச் சப்புக் கொட்டிக் கொண்டது. ''இன்று இரவு எனக்குக் கொண்டாட்டம்தான். பாவம், மன்னருக்குத் திண்டாட்டமாக இருக்கும்'' என்று நெருப்புச் சிரிப்புச் சிரித்தது டிராகன்.

தன்னுடைய தோழனை தென்திசைக் காற்றைக் கூப்பிட்டது. சூரியன் மலைவாயிலில் விழுந்து இருள் போர்வை மூடப்பட்டதும் தென்திசை காற்றும் நெருப்பு டிராகனும் நகரை நோக்கிக் கிளம்பின. ''நமக்கு இன்று கொண்டாட்டம்தான். தீ கொழுந்து விட்டுக் குதூகலமாக எரியப் போகிறது, பார். ஆனால் ஒன்றை மட்டும் மறக்காதே. மழை மேகங்களைக் கிட்ட நெருங்க விடாதே. ஊதி விரட்டு'' என்று காற்றுத் தோழனுக்கு எச்சரித்துக்கொண்டே நடந்தது டிராகன். தென் காற்றுக்கு ஒரே குஷி. தீ வானளாவச் சுருண்டும், நெளிந்தும் நர்த்தனமாடுவதைக் காணுவதிலே காற்றுக்கு எப்போதும் ஒரு களிப்பு. நகரத்தைச் சொக்கப்பனை கொளுத்த விரைந்தனர் இருவரும்.


நகரின் எல்லைக்கு வந்ததும் நெருப்பு டிராகன், ''காற்றண்ணே! ம், பலமாக ஊது'' என்றது. தீ நாக்குகள் சுழன்று விளையாடின. ஜ்வாலைக்குக் காற்று உதவியது. பட்டப் பகல் போலப் பேரொளி. டிராகனுக்குக் கொண்டாட்டமான கொண்டாட்டம். அது எரிமலைக் குழிக்குத் திரும்பியபோது நகரம் இருந்த இடத்தில் இப்போது வெறும் சாம்பல்தான் காணப்பட்டது.



தீ பரவுமுன் மன்னரும் நகரத்து மக்களும் வெகு தூரத்துக்கு ஓடிப் போய் விட்டார்கள். டிராகனின் அட்டூழியத்துக்கு எப்படி முடிவு கட்டுவது என்ற கவலையும் கோபமும் கொண்டவர்கள் கூடிப் பேசி ஒரு முடிவு எடுத்தார்கள். சிறுவுக்குத் தூது அனுப்பி மழை டிராகனை வரவழைப்பது என்பதே அந்த முடிவு.

மழை டிராகன் வருகை தந்தபோது அதற்குக் கோலகலமான வரவேற்பளிக்கப்பட்டது. மாலைகள் சூட்டி, மரக்கால் மரக்காலாகக் காய்கறிகளைக் காணிக்கையாக வைத்து வணங்கினார்கள் அதை. ஆனாலும் மழை டிராகனால் பிரயோசனமில்லை என்பது நிரூபணமாகி விட்டது. ஆரம்பத்தில் அது அடிக்கடி கொட்டுக் கொட்டென்று மழையைக் கொட்டி, நகரை ஒரே சகதி மயமாக்கி விட்டது. சதுப்பு நிலமாகி விட்டது தலைநகரம்.

மழை டிராகனைச் சிறுவுக்குத் திருப்பி அனுப்பினார்கள். மறுபடியும் சபை கூடியது. அறிவாளிகள் நாட்டின் வரைபடத்தை வைத்துக் கொண்டு ஆராய்ந்தார்கள். நெருப்பு டிராகனால் ஏற்படும் அழிவை எப்படித் தடுக்கலாம் என்பதற்கான வழி வகைகள் விவாதிக்கப்பட்டன. முடிவில் ஒரு முதிர்ந்த சிந்தனையாளர் கூறினார்: ''நெருப்பு டிராகன் வழக்கமாகத் தென் கிழக்குப் பகுதியிலுள்ள குறுகலான மலைக் கணவாய் வழியாகத்தான் வருகிறது. எரிமலையிலிருந்து வருவதற்கான நல்ல பாட்டை அது ஒன்றுதான். ஆகவே நாம் கணவாய் எங்கு குறுகலாக உள்ளதோ, அங்கு அந்த நெருப்பரக்கன் வரும் பாதையில் ஒரு பெரிய குழி தோண்டுவோம். அதில் நீரைப் பாய்ச்சி நிரப்புவோம். நெருப்பு





டிராகன் ஆவேசமாக வரும்போது அந்தக் குழிக்குள் தலைகுப்புறத் தடுக்கி விழும். குழியிலுள்ள நீர் அதன் உக்கிரத்தை ஒடுக்கி விடும். அதிலிருந்து அது எழுந்து வந்தாலும் நகருக்குள் வரும்போது அது நனைந்து பலம் குன்றிப்போகும். அத்தனை சேதம் விளைவிக்க முடியாது'' என்றார் அந்த முதிய அறிவாளி. எல்லோருக்கும் இது நல்ல யோசனையாகவே பட்டது. மறுநாளே வாலிபர்களெல்லாம் மண்வெட்டியுடன் மலைக் கணவாயை நோக்கிக் கிளம்பினார்கள். ஒரு மாதம் பாடுபட்டுப் பெரும் பள்ளம் தோண்டி மண்ணை அப்புறப்படுத்தி, அதில் ஆற்று நீரைப் பாயச் செய்து குளமாக்கினார்கள். 'அப்பாடா' என்று நிம்மதிப் பெருமூச்சுடன் நகரத்துக்குத் திரும்பினார்கள்.

நெருப்பு டிராகனுக்கு அகோரப் பசி கண்டது. அன்று இரவு ஆர்ப்பாட்டமாக நகருக்குள் புகுந்தது, கணவாய் வழியாகத்தான். எதிர்பார்த்தபடியே குழிக்குள் குப்புற விழுந்தது. அதன் தீ நாக்குகள் பல அவிந்தன. ஆனாலும் கூடத் தடுக்கி விழுந்ததனால் ஏற்பட்ட ஆக்ரோஷத்துடன் நகருக்குள் புகுந்த டிராகன் கணிசமான அளவில் நாசமாக்கி விட்டுத்தான் திரும்பியது. அத்தனை மோசமில்லை ஆனாலும், அடுத்த தடவை அது குழிக்குள் விழாமல் எச்சரிக்கையாகி விடுமே. மன்னரையும் மக்களையும் கவலையும் வேதனையும் கவ்விக் கொண்டன. இந்த நிலையில்தான் தூதுவன் ஒரு செய்தியைக் கொண்டு வந்தான். கிராமப்புறத்தில் ஓர் இளம் பெண் மத்தளத்தைக் கொட்டிக்கொண்டு குதூகலமாக ஆடிப் பாடி மகிழ்கிறாள் என்பதே அந்தச் செய்தி. எல்லோரும் வேதனையில் நொந்து போயிருக்கும்போது அவள் மட்டும் ஏன் எதற்காக மகிழ வேண்டும், அதுவும் மத்தளம் கொட்டியபடி? அதற்கும் தூதுவன் விடை கூறினான்: '''நெருப்பு டிராகனை ஒடுக்கி ஓட்ட எனக்கு வழி தெரியும். ஆனால் என்னைத்தான் யாரும் வந்து கேட்கவில்லையே?' என்று மத்தளத்தில் தட்டிக் கொண்டு ஆடுகிறாள் அந்தப் பெண்.''

உடனே மன்னர் தமது பல்லக்கை அனுப்பி அந்தப் பருவப் பெண்ணைக் கையோடு அழைத்து வருமாறு ஆணையிட்டார். மத்தளப் பெண் கூறிய யோசனை இதுதான்: ''நான் மத்தளப் பெண் மட்டுமல்ல; சிறந்த சிற்பியும் கூட. கல்லாலே ஒரு பெரிய சிலையைச் செய்யப் போகிறேன். இதற்கு நெருப்பு விழுங்கி என்று பெயர். இதைக் கண்டாலே அந்த நெருப்பு டிராகன் பயந்தோடிப் போய்ப் பதுங்கிக் கொள்ளும். மறுபடியும் நம் ஊர்ப் பக்கம் வரவே வராது.''

அவள் விருப்பப்படியே சிலை வடிக்கும்படி கேட்டுக் கொண்டார் அரசர். நாட்டில் உள்ள கல் தச்சர்கள், சிற்பிகள் கட்டடக் கலைஞர்கள் எல்லாரும் அவளுக்கு உதவினார்கள். மத்தளப் பெண் உருவாக்கிய சிலை மிகப் பிரும்மாண்டமானதாக வாயைப் பிளந்து கொண்டு கோரமே உருவாக... ஐயோ! அதை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. பார்த்தால்தான் புரியும்.

நெருப்பு டிராகனிடம் ஓடியது தென் திசைக் காற்று. ''உன்னை விரட்ட ஒரு பெரிய ராட்சதனை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்'' என்றது.

''அப்படியா? அதை நானே போய்ச் சந்திக்கிறேன்'' என்று அகம்பாவத்துடன் கிளம்பியது நெருப்பு டிராகன். தன்னை அழிக்க யாராலும் முடியாது என்ற கர்வம் அதற்கு. வழியிலுள்ள குழியும் மறந்து விட்டது. ஆகவே அதில் பொத்தென்று விழுந்தது. அதன் திகுதிகு உடல் நனைந்து விட்டது. நமுத்துப்போன நெருப்பு டிராகன் நகருக்குள் புகுந்தது. அங்கே கோட்டை வாசல் முன் மத்தளப் பெண் உருவாக்கி எழுப்பியிருந்த பிரும்மாண்டமான நெருப்பு விழுங்கி மிருகம் தன் உருண்டையான கண்களை உருட்டி விழித்துக் குகை போன்ற வாயைத் திறந்து அலை போன்ற நாக்கை நீட்டிச் சப்புக்கொட்டியபடி வரவேற்றது டிராகனை. ''ஹா ஹா... வா வா, உனக்காகத்தான் காத்திருக்கிறேன். உன்னைத் தின்றுதான் நான் பசியாற வேண்டும்'' என்றது.

நெருப்பு விழுங்கியைக் கண்ட நெருப்பு டிராகன் அப்படியே நடுநடுங்கிப் போயிற்று. ''ஐயோ, எத்தனை பெரிய வாய்! எவ்வளவு பெரிய பற்கள்? அந்த விழிகள்! நான் செத்தேன்'' என்று தன் தீ நாக்குகளைச் சுருட்டிக் கொண்டு எடுத்தது ஓட்டம். எரிமலைக்குள் போய்ப் புகுந்து கொண்ட நெருப்பு டிராகன் அதன் பிறகு வெளியில் வரவேயில்லை.

நாட்டையும் மக்களையும் அரண்மனையையும் நெருப்பு டிராகனிடமிருந்து காப்பாற்றிய மத்தளப் பெண்ணை மன்னர் எப்படிப் பாராட்டியிருப்பார் என்று சொல்லவும் வேண்டுமா? அந்த மத்தளப் பெண்ணைத்தான் இவ்விதழ் அட்டையில் நீங்கள் காண்கிறீர்கள்.

கொரியா நாட்டின் ஊர் எல்லையில் மத்தளப் பெண் உருவாக்கிய ஊர்க் காவல் சிலையை அங்கு போனீர்களானால் இன்றும் நீங்கள் காணலாம்.

கருப்பு மான் ★ அ. ராம்கோபால்

இந்தியாவிலேயே பெரிய மான் வனம் ராஜஸ்தானத்தில் சாபர் என்ற இடத்தில் உள்ள அபயாரண்யம் ஆகும். நம் நாட்டில் பல மான் இனங்கள் உண்டு. இவற்றில் மிக முக்கியமானவை கஸ்தூரி மான், கடம்பு (சாம்பர்) மான், புள்ளி மான், இரலே என்னும் கருப்பு மான் ஆகியவை.

கருப்பு மானை கிருஷ்ண மிருகம் எனவும் கூறுவார்கள். ஆங்கிலத்தில் '' ஆண்டிலோப் '' (Antelope) என இதற்குப் பெயர். உலகிலேயே மிகஅதிக வேகமாக ஓடும் ஆற்றல் பெற்ற வன



விலங்கு இந்த மான்தான். மணிக்கு நூறு கிலோ மீட்டர் வேகத்தில் இது ஓடக் கூடியது. ஒரே தாண்டலில் இருபது அடி தூரம் சென்றுவிடக் கூடியது.

இந்த மானின் தாயகம் நம் நாடேயாகும். வட நாட்டில் இந்த மானைக் காலியா என்றும் கிருஷ்ணசார் என்றும் கூறுவார்கள். ஆண் மான் ஏனம் எனப்படும். பெண் மான் அரிணம் அல்லது ஹரிண் எனப்படும். நம் நாட்டில் கேரளம் நீக்கி மற்ற எல்லாப் பகுதிகளிலும் இந்த மான்கள் உண்டு. ஆனால் மற்ற இடங்களை விட ராஜஸ்தானிலும் பஞ்சாபிலும் மிகுதி.

இந்த மான் பிறந்து இளம் குட்டியாக இருக்கும்போது கருப்பாக இருப்பதில்லை. மஞ்சள் கலந்த பழுப்பு நிறமாக இருக்கும். மூன்றாண்டுகளுக்குப் பிறகு வாலிபப் பருவம் எய்தும்போதுதான் கருமையாக மாறும். அப்படியும் உடல் முழுவதும் கருமையாக மாறி விடுவதில்லை. வயிற்றின் அடிப் பாகம், தொடையின் உட்பாகம், கண்களைச் சுற்றியுள்ள பாகங்கள் எல்லாம் நல்ல வெண்மையாக இருக்கும். இதனால் இந்த மான் பார்க்க மிக அழகாக இருக்கும். 'மான் இனத்திலேயே மிகவும் அழகானது இதுதான், புள்ளி மான் அல்ல' எனக் கருதுவோரும் உண்டு.

பனிப் பிரதேச மான்கள் நீக்கி மற்ற மான்களில் ஆண் மான்களுக்கு மட்டுமே கொம்புகள் உண்டு. பெண் மான்களுக்குக் கொம்புகள் கிடையாது. கருமானில் ஆண்களுக்கு ஒரு வயதாகும் போது கொம்பில் திருகல் எதுவும் இருக்காது. இரண்டாவது வயதில் கொம்பில் திருகல் தோன்றும். மூன்றுவது ஆண்டின் முடிவில் அது வாலிபப் பருவம் எய்தும்போது ஐந்து திருகல் வரை தோன்றிப் பார்க்க மிக அழகாக இருக்கும். அப்பொழுது கொம்பின் நீளம் 16 — 20 அங்குலம் இருக்கும். வாலிப நிலையில் இம்மானின் உயரம் அதிகப்பட்சம் 8 அடி, எடை 90 ராத்தலாக இருக்கும். கொம்பு பூரணமாக வளர்ந்து வாலிப மிடுக்குடன் உள்ள ஆண் மான்களை மருப்பிரலே எனக் கூறுவார்கள்.

இந்த மான்கள் மலைக் காடுகளில் வசிக்க விரும்புவதில்லை. திறந்த வெளிக் காடுகளிலேயே வாழுகின்றன. காலை நேரத்தில் வெயில் அதிகமாகும் முன்பும் மாலை நேரத்தில் வெயில் குறைந்த பின்பும் மேய்ந்து வெயில் அதிகமாக உள்ள நேரத்தில் மர நிழல்களில் இளைப்பாறும். வேட்டைக்காரர்களின் குண்டு பட்ட மான்கள் எளிதாக அவர்கள் கையில் சிக்காது. புதர்களில் மறைந்து தப்பி அங்கு உயிர் விடும்.

வருடத்தில் எல்லா மாதங்களிலும் இவை குட்டி போடும். போட்ட குட்டிகளை முதல் சில நாளைக்குச் செடிசெத்தைகளைப் போட்டு மூடி வைக்கும். பிறகு அவை தாயோடு மேயக் கிளம்பிவிடும். இம் மான்களை வீடுகளில் வளர்ப்பது எளிது. வெள்ளாடுகளோடு சேர்ந்து இவற்றை வளர்க்கலாம். அவற்றிற்குப் போடும் ஆகாரங்களை இவற்றுக்கும் போட்டால் போதுமானது.

நட்பின் இலக்கணம்

— கௌசிகன்

ரொம்ப ரொம்ப வருஷங்களுக்கு முன்னாலே பராக்கிரமவர்மர் என்ற அரசர் இருந்தார். அவர் சக்கரவர்த்தி. அவரது ராஜ்யம் நெடுந் தூரத்துக்கு நெடுந் தூரம் விரிந்து கிடந்தது. அவரது ஆளுகைக்குட்பட்டுப் பல சிற்றரசர்கள் இருந்தார்கள். பராக்கிரமவர்மரின் நாட்டிலே ஒரு பழக்கம். சிற்றரசர்களுக்குக் குழந்தை பிறந்தால் குழந்தைக்கு ஒரு வயதானதும் தலைநகரத்துக்குக் குழந்தையுடன் வர வேண்டும். ராஜ்யத்தின் மதகுரு தலைநகரில்தான் இருந்தார். அவர் மிக்க அறிவாளி. தெய்வாம்சம் மிக்கவர். வயதில் மூத்தவர். ஆகவே இளவரசர்களை அவரிடம் சமர்ப்பித்து ஆசி பெற்றுச் செல்ல வேண்டும். அரசக் குழந்தைகளுக்கு அவரே பெயரிடுவார்.

அன்று ராஜதானியின் வெளியேயுள்ள விருந்தினர் மாளிகையில் இரண்டு சிற்றரசர்கள் தங்கள் பரிவாரங்களுடன் வந்து பாடி இறங்கி யிருந்தார்கள். அவர்களில் ஒருவர் வடக்கு எல்லையில் உள்ள வேங்கை நாட்டைச் சேர்ந்தவர். மற்றவர் கிழக்கு எல்லையில் உள்ள கடம்பூரிலிருந்து வருபவர். இருவருமே நாட்டின் மதகுருவைக் காண வந்திருந்தனர். அவர்கள் ஒருவரை யொருவர் அறிமுகப் படுத்திக் கொண்டபோது ஓர் இரகசியம் வெளியாயிற்று. அவ்விருவருக்கும் ஒரே நாளில் ஒரே வேளையில் குழந்தை பிறந்திருக்கிறது என்பதே, அந்த வியப்பான செய்தி. இருவரும் அரச குமாரர்கள். 'எத்தனை ஒற்றுமை?' என்று வியந்து போனார்கள் குழந்தைகளின் தந்தைமார். பிற்காலத்தில் இவ்விருவரும் இணைபிரியாத தோழர்களாகவும் இருக்கப் போகிறார்கள் என்ற ரகசியம் அப்போது அவர்களுக்குத் தெரியாது.

குழந்தைகளுக்கு ஆசி வழங்கிய மதகுரு கடம்பூர் இளவரசனுக்கு ஆனந்தன் என்றும் வேங்கை நாட்டு இளவரசனுக்கு வித்யாதரன் என்றும் பெயர் சூட்டினார். அதுமட்டுமல்ல; இரண்டு குழந்தைகளும் ஒன்றே போல் இருந்ததைக் கண்ட அப்பெரியார் தம்மிடமிருந்த நவரத்தின மணி மாலைகள் இரண்டை அக் குழந்தைகளின் கழுத்தில் சூட்டி விடை கொடுத்தார். அவர்களைப் போலவே அந்த மாலைகள் இரண்டும் ஒன்றே போல் இருந்தன. பெற்றோர்களுக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. குழந்தைகளை வாரி அணைத்தபடி பிரியா விடை பெற்றனர்.

ஆனந்தனும் வித்யாதரனும், வளர்ந்து பெரியவர்களானபோது இருவரும் அடிக்கடி சந்தித்துக் கொண்டார்கள். அவர்களிடையே உறுதியான நட்பு ஏற்பட்டது. இருவரும் வாலிப வயது அடைந்தார்கள். ஒரே உயரம், ஒரே உருவம், அதே பார்வை. அந்நியர் காண நேர்ந்தால் அவ்விருவரையும் இரட்டையர் என்றே சந்தேகிப்பார்கள். அத்தகைய அதிசய சாயல் ஒற்றுமை.

சிற்றரசர்கள், தங்கள் குமாரர்கள் வாலிபப் பருவத்தை அடைந்ததும் அவர்களைச் சக்கரவர்த்தியிடம் அனுப்பி விடுவார்கள். பராக்கிரம வர்மர் இளவரசர்களைத் தம் அரசாங்கத்தின் பல்வேறு இலாகாக்களில் நியமித்து அவர்களை நிர்வாகத் திறமை மிக்கவர்களாக்கிப் பட்டம் பதவிகளுடன் திருப்பி அனுப்பி வைப்பார். இதுதான் வழக்கம். அதன்படி ஆனந்தனும் வித்யாதரனும் தலைநகருக்கு வந்தார்கள். பராக்கிரம வர்மர் ஆனந்தனுக்குப் பொக்கிஷ சாலையைக் காக்கும் பொறுப்பைக் கொடுத்தார். வித்யாதரனிடம் அரண்மனையையும் அந்தப்புரங்களையும் காக்கும் பொறுப்பான பணி ஒப்புவிக்கப்பட்டது.

இளவரசர்களான நண்பர்கள் இருவரும் சாம்ராஜ்யத்தின் தலைநகரில் சந்தோஷமான வாழ்க்கை நடத்தினார்கள். வித்யாதரனுக்கு அரண்மனையையும் அந்தப்புரத்தையும் நிர்வகிக்கும் பொறுப்பாதலால் இளவரசி கனகவல்லியைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. இளவரசியின் அழகில் மனதைப் பறிகொடுத்தான் வித்யாதரன். இதைத் தன் நண்பன் ஆனந்தனிடம் மட்டுமே தெரிவித்தான். இளவரசியிடம் பேசவோ பழகவோ வித்தியாதரனுக்

குத் தைரியமில்லை. ஏனென்றால் சக்கரவர்த்தி பராக்கிரமவர்மர் தம் அருமை மகளை வேறொரு சாம்ராஜ்யாதிபதியின் மகனுக்கு மண முடிக்க எண்ணியிருந்தார். வித்யாதரனோ ஒரு சிற்றரசனின் மகன். அவனுக்குக் கனகவல்லியை மனைவியாக்குவாரா மன்னர்?

இதே போல் ஆனந்தனும் ஒரு பெண்ணிடம் மனசைப் பறி கொடுத்தான். அவள் பெயர் மோகனாங்கி. அவர்கள் திருமணம் நிறைவேறத் தடை ஏதும் இருக்காது. காரணம் மோகனாங்கி ஒரு பெரிய பிரபுவின் அருமை மகள். அந்தப்புரத்தில் இளவரசியின் தோழிகளில் ஒருத்தியாக இருந்தாள். ஆகவே அவளைப் பற்றி வித்யாதரனுக்கு நன்கு தெரியும். தன் தோழன் ஆனந்தனின் காதலுக்கும் கல்யாணத்துக்கும் மனப்பூர்வமாகச் சந்தோஷப்பட்டான் வித்யாதரன். ஆனால் அவன் உள் மனம் மட்டும் 'ஆனந்தனுக்கு ஏற்றவளில்லை இந்த மோகனாங்கி' என்று கூறியது. ஆனந்தனை அவள் உள்ளன்போடு விரும்பவில்லை. கடம்பூரின் ராணியாகலாம் என்ற ஆசையினால்தான் அவன் கரம் பற்றத் துடித்தாள் அவள். ஆனந்தனும் வித்யாதரனும் இணைபிரியாத நண்பர்களாக இருப்பதுகூட அவளுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் வித்யாதரன் இதையெல்லாம் தன் நண்பனிடம் விளக்கவில்லை. மோகனாங்கியிடம் அவன் உயிரையே வைத்திருந்தான். ஆகவே அவன் மகிழ்ச்சியைக் குலைக்க விரும்பவில்லை வித்யாதரன்.

ஆனந்தன் மோகனாங்கியை மணப்பதென்று உறுதியானதும் மன்னர் பராக்கிரமவர்மர் காதலர்களை ஆசீர்வதித்து விடை கொடுத்தார். ஆனந்தன் கடம்பூர் கிளம்புமுன் நண்பன் வித்யாதரனிடம் பிரியாவிடை கொண்டான். ''அருமை நண்பா! உன் காதலும் கைகூடட்டும். நீ காதலிப்பது இளவரசியை. ஆகவே எச்சரிக்கையாக இரு. மன்னரின் கோபத்துக்கு ஆளாகும்படியாக எதுவும் செய்து விடாதே'' என்று எச்சரித்து விட்டுக் கிளம்பினான் ஆனந்தன்.

ஆனந்தன் கவலைப்பட்டபடி ஏதும் நடந்துவிடவில்லை. இளவரசியே வித்யாதரனிடம் மோகம் கொண்டிருந்தாள். இதை அறிந்தபோது வித்யாதரனின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. இளவரசியும் வித்யாதரனும் அடிக்கடி ரகசியமாகச் சந்தித்துக் கொண்டார்கள். நேரம் போனது தெரியாமல் பேசிக் கொண்டிருந்தார்கள். இவர்களின் காதலும் ரகசியச் சந்திப்புக்களும் பலருக்கும் தெரிந்த இரகசியமாகியது. நல்ல உள்ளம் படைத்தவர்கள் அவர்கள் மகிழ்ச்சியில் தாங்களும் மகிழ்ந்து போனார்கள்.

ஆனால் எல்லோருக்குமே நல்ல இதயமாக இருப்பதில்லையே. வித்யாதரனைப் போலவே மன்னரிடம் சேவை செய்ய வந்தவன் மார்த்தாண்டன். அவனும் ஒரு சிற்றரசனின் குமாரன்தான். ஆனந்தனுக்கும் வித்யாதரனுக்கும் மன்னர் காட்டிய பரிவும் உயர்வும் அவன் உள்ளத்தைப் பொறாமையால் எரித்துக் கொண்டிருந்தன. இப்போது இளவரசியின் அன்பையும் அவன் அபகரித்துக் கொண்டதை அவனால் தாங்கவே முடியவில்லை. ஆகவே மகாராஜா பராக்கிரமவர்மரிடம் வித்யாதரனைப் பற்றி, இளவரசியின் மனசைக் கெடுத்து மயக்கி வருகிறான் என்றெல்லாம் கூறிக் கேவலமாகக் குற்றம் சாட்டினான்.

அருமை மகளுக்கு அவப் பெயர் வருவதை எந்தத் தகப்பனார்தான் தாங்கிக் கொள்வார்? வித்யாதரன் உடனே அவைக்கு அழைக்கப்பட்டான். மன்னரின் கோபத்தைக் கண்ட வித்யாதரன் நடுநடுங்கிப் போனான். ''நான் குற்றமற்றவன்'' என்றான் பலமற்ற குரலில். மன்னரின் அருகிலிருந்த மார்த்தாண்டன் உடனே கொக்கரித்தான். ''நீ பொய்யன். வஞ்சகன். நிரபராதியானால் என்னோடு வாட் போரிட்டு,



வெற்றி பெற்றுக் குற்றமற்றவன் என்பதை நிரூபித்துக் காட்டு'' என்று நிபந்தனை விதித்தான் கயவன். அந்த நாட்டு வழக்கப்படி இப்படிக் குற்றம் சாட்டப் பட்டவர் போர்ப் பந்தய மைதானத்தில் சண்டையிட்டு வென்று தாங்கள் நிரபராதி என்பதை நிலை நாட்டுவார்கள். உடல் முழுதும் கவச மணிந்து கேடயமேந்திப் பொதுமக்களும் அரசப்பெருமக்களும் சூழ்ந்திருக்கப் போரிடுவார்கள். சுத்த வீரன் எவனும் இந்த நிபந்தனைப் போரை ஏற்காமல் இருக்க மாட்டான்.

வித்யாதரனும் மார்த்தாண்டனும் வாட்போர் நிகழ்த்த ஒரு நாள் குறிக்கப் பட்டது. உண்மை யார் பக்கம் இருக்கிறதோ அவர்களே வெற்றி பெறுவார்கள் என்பதே மக்களின் நம்பிக்கை. வித்யாதரனின் மனம் சஞ்சலமடைந்தது. மார்த்தாண்டனின் குற்றச்சாட்டில் உண்மை இருந்தது. இளவரசியும் வித்யாதரனும் அடிக்கடி சந்தித்துக் கொண்டது உண்மைதானே? சத்தியம் மார்த்தாண்டனின் பக்கம் இருக்கும் போது தன்னால் எப்படி வாட் போரில் வெற்றி கொள்ள முடியும்? என்று கலங்கினான் வித்யாதரன். இந்த இக்கட்டான வேளையில் அவனுக்கு யோசனை சொல்லவோ ஆறுதல் கூறவோ யாருமில்லை. சட்டென்று நண்பன் ஆனந்தனின் நினைவு வந்தது. 'இந்நிலையில் என் தோழன் எனக்கு எப்படியும் உதவுவான்' என்று இரவோடிரவாகக் கடம்பூர் நோக்கி விரைந்தான்.


வித்யாதரனின் வேதனையைக் கேட்ட ஆனந்தன், ''கவலைப்படாதே. நீ என் அரண்மனையில் இங்கேயே இரு. நான் இளவரசியைப் பார்த்தது கூட இல்லை. ஆகவே மார்த்தாண்டனோடு உன் இடத்தில் நான் வாள் ஏந்திப் போர் செய்கிறேன். உண்மை என் பக்கமும் இருக்கும். நாம் இருவரும் ஒன்றே போலிருப்பதால் உன் கவசத்தினுள் நான் இருப்பதை யாரும் சந்தேகிக்கவும் மாட்டார்கள். வெற்றி எனக்கே, இல்லை, உனக்கே கிடைக்கும். கலங்காமல் என் வரவுக்காக இங்கேயே காத்திரு'' என்று கூறிக் குதிரையேறித் தலைநகருக்குப் பறந்தான் ஆனந்தன், வித்யாதரனை மாறிப் போரிட.

குறிப்பிட்ட நாளும் வந்தது. போர்ப் பந்தய மைதானத்தில் எல்லோரும் கூடினார்கள். ஒரு பக்கம் வேங்கை நாட்டின் கொடி அசைந்தாடிக் கொண்டிருக்க, உடலை மறைத்துக் கவசமணிந்திருந்த ஆனந்தன் வித்யாதரனைக் கையில் வாளும் கேடயமும் ஏந்தி நின்று கொண்டிருந்தான். மறு கோடியில் மார்த்தாண்டன் தன் நாட்டுக் கொடியின் கீழ் அவனும் கவச மணிந்து கட்கமேந்தி நின்று கொண்டிருந்தான். வித்யாதரனின் இடத்தில் ஆனந்தன் வந்திருப்பது அங்கு யாருக்குமே தெரியாது.

மன்னரிடமிருந்து ஆணை பிறந்ததும் வீரர் இருவரின் வாட்களும் கணீர் ஒலி எழுப்பின. மின்னலைப் போல ஒளி வீச வாளும் வாளும் மோதின. பயங்கரமான சண்டை. பார்வையாளர் மூச்சு விட மறந்து உட்கார்ந்திருந்தனர். ஆனந்தன் நண்பனின் மானத்தைக் காக்க ஆக்ரோஷமாகப் போரிட்டான். முடிவு? மார்த்தாண்டன் படுகாயமுற்றுத் தரையில் வீழ்ந்தான். வெற்றி வித்யாதரனுக்கு. அவன் நிரபராதி என்பது நிச்சயிக்கப்பட்டது. மன்னர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார் வித்யாதரனிடம். ''பொறாமைக்காரனான மார்த்தாண்டனின் பொய்யுரை கேட்டு உன் நேர்மையில் சந்தேகம் கொண்டு உன் மனத்தைப் புண்படுத்தி விட்டேன். என் அருமை மகளின் பெயருக்கு ஏற்பட்ட களங்கத்தை உன் வீரத்தினால் களைந்து விட்டாய். கடமைக்கும் வீரத்துக்கும் தகுதியான பாராட்டு என் மகளை உன் மனைவியாக்குவதுதான். கனகவல்லியின் கணவனாவதற்கான தகுதிகள் உன்னிடம் இருக்கின்றன. என் மகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார் மன்னர் பராக்கிரமவர்மர். கவசம் அணிந்த நிலையிலேயே தலை வணங்கி மன்னரின் வேண்டுகோளை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டான் ஆனந்தன் – வித்யாதரனாக.

நண்பர்கள் இடம் மாறினார்கள். வித்தியாதரன் கனகவல்லியின் கரம் பற்றினான். தனித்திருக்கும்போது மனைவியிடம் தன் நண்பன் ஆனந்தன் தனக்காகச் செய்த காரியத்தைக் கூறினான். ''நட்பின் இலக்கணமாகத் திகழும் உங்கள் நண்பருக்கு நாம் இருவருமே கடமைப் பட்டிருக்கிறோம்'' என்றாள் கனகவல்லி கண்ணீர் மல்க. வித்யாதரனும் கனகவல்லியும் சந்தோஷமாக இருந்தார்கள். அவர்களுக்கு ஜோடியாக இரண்டு பிள்ளைகளும் பிறந்தன.


ஆனந்தனின் வாழ்க்கையோ பரிதாபமாக இருந்தது. எண்ணம் செயல் இரண்டாலும் தூயவனான அவனுக்குத் தொழு நோய் வரவேண்டுமானால் அது முன் வினைப் பயனே தான். நாட்டின் மிகச் சிறந்த வைத்தியர்கள் எவ்வளவோ பாடுபட்டும் அக் கொடிய நோயைக் குணப்படுத்த முடியவில்லை. மனைவி மோகனாங்கியோ நோய்வாய்ப்



பட்ட மன்னன் ஆனந்தனிடம் இரக்கமே காட்டவில்லை. அவனைக் காணவும் விரும்பவில்லை அக்காதகி. அரண்மனை மதில் சுவரின் ஓரமாக ஒரு குடிசை கட்டினாள். ஆனந்தன் இருக்க வேண்டிய இடம் அதுதான் என்று அவனை அங்கு அப்புறப்படுத்தினாள். அரசாட்சி அவள் கைக்கு மாறியது. நோயுற்ற மன்னனின் பசிக்கும் கூடச் சரியான உணவு தரப்படவில்லை. எப்படி வாழ்ந்தவன் எப்படியாகி விட்டோம் என்ற வேதனையினால் துடித்துப் போனான் ஆனந்தன். மனைவியால் அலட்சியப் படுத்தப் பட்டு அவமானப்பட விரும்பாத ஆனந்தன் தன்னிடம் விசுவாசமுள்ள இரண்டு ஊழியர்களைக் கூப்பிட்டான். ஒரு சிவிகை தயாரித்துத் தன்னை அதில் வைத்து அங்கிருந்து தூக்கிச் செல்லுமாறு வேண்டிக் கொண்டான். ''உலகம் பரந்தது. உலகிலுள்ளோர் என்னிடம் இரக்கம் காட்டுவார்கள். மனைவியைப் போலக் கொடூரமாக இருக்க மாட்டார்கள்'' என்று கூறிக் கிளம்பி விட்டான் ஆனந்தன்.

ஆனந்தனிடம் மதிப்பும் மரியாதையும் விசுவாசமும் கொண்ட ஊழியர்கள் இருவரும் அரசனின் விருப்பப்படியே அவரை ஒரு சிவிகையில் வைத்துத் தூக்கிக்கொண்டு கடம்பூரை விட்டுக் கிளம்பினார்கள். மன்னனாக வாழ்ந்தவன் உணவுக்குட ...ச எடுத்தபடி சிவிகையில் படுத்துக் கொண்டு போனான். நாளுக்கு நாள் அவன் உடல் பலவீனப் பட்டுக் கொண்டு வந்தது. சிவிகை தூக்கிகளிடம் ஒரு மணி இருக்கும். அதை ஒலிக்கச் செய்வார்கள். தொழு நோயாளி வருகிறார் என்பதை உணர்த்தவே அந்த மணியோசை. அதைக் கேட்கும் மக்கள் ஒதுங்கி வழி விடுவார்கள்; உதவியும் செய்வார்கள்.

ஆனந்தனைச் சுமந்தபடி சிவிகை வேங்கை நாட்டுக்கு வந்தது. மகாராஜா பராக்கிரமவர்மரின் மகளை மணந்து கொண்டாலும் கூட வித்தியாதரன் தன் மனைவியுடன் தன் சொந்த நாட்டிலேதான் இருந்தான். அரண்மனைப் பக்கமாகச் சிவிகை சென்றது. சிவிகை தூக்கிகளின் மணியோசையைக் கேட்ட வித்யாதரன் தன் பணியாளர்களிடம், ''யாரோ பாவம், பரிதாபமான கொடிய வியாதியால் பீடிக்கப் பட்ட அவனுக்கு உணவும் வசதியும் செய்து அனுப்புங்கள்'' என்று உத்தர விட்டான். மன்னர் வித்யாதரனின் விருப்பத்தை நிறைவேற்றி விட்டுத் திரும்பிய அந்தப் பணியாளன், ''அரசே! ஓர் அதிசயமான காட்சியைக் கண்டேன். அந்தப் பெருவியாதிக்காரனின் கழுத்தில் நீங்கள் அணிந்திருப்பதே போல் அதே அச்சாக ஒரு நவரத்தின



இவன் யார்?

சுமார் எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பாக, மளிகைக்கடை ஒன்றில் ஓர் இளம் வாலிபன் வேலை பார்த்தான். அந்தக் கடையில் பெருக்குவது, கணக்கு எழுதுவது சரக்குகளை அடுக்குவது எல்லாம் அவனே. எங்கும் நடந்தே போக வேண்டும். காலை ஏழு மணி முதல் இரவு ஒன்பது மணி வரை இடுப்பொடிய வேலை இருக்கும்.

கடின உழைப்பு, போதாத கூலி இரண்டும் சேர்ந்து அந்த இளம் வாலிபனுக்கு வாழ்க்கையில் வெறுப்புத் தட்டியது. தினம் தினம் தாயிடம் வந்து அழுவான். அவள் அவனைவிடக் கடுமையாக உழைக்கிறவள். மகனுடைய துன்பத்தைத் தனது ஆறுதல் வார்த்தைகளால் துடைப்பாள்.

அந்த இளம் வாலிபன் தனக்குக் கல்வி போதித்த ஆசிரியருக்குக் கடிதம் எழுதினான், துன்பம் தாங்காது தற்கொலை செய்துகொள்ளப் போவதாக. அவர், ''இளைஞனே ! நீ அறிவாளி. பதறாதே ! என் பள்ளியிலே சிறு வேலை தருகிறேன். நீ உடனே புறப்பட்டு வா'' என்றார். அவன் தற்கொலை எண்ணத்தைக் கைவிட்டான்.

அவன் புகழ்பெற்ற நூல்களை எழுதிய சிந்தனையாளன்; விஞ்ஞான கற்பனைக் கதைகள் எழுதிய எழுத்தாளன். உலகப் புகழ்பெற்ற ஆசிரியன். அவன் எழுதிய நூல்கள் எழுபத்தியேழு. அவன் சம்பாதித்த பணம் முப்பத்தைந்து லட்சம் பவுன்கள். அவன் பெயர் **எச். ஜி. வெல்ஸ்.**

— **அருந்ததி**

மணி மாலை கிடந்தது. முதலில் நான் இதை உங்களிடமிருந்துதான் அவன் திருடிவிட்டானோ என்று சந்தேகப்பட்டேன். அதை உறுதிப்படுத்திக் கொள்ளவே உங்கள் கழுத்தில் நவரத்தின மணி மாலை இருக்கிறதா என்று பார்க்கவே ஓடி வந்தேன், இங்கு. நல்ல வேளை! இருக்கிறது. அது போலியாக இருக்கும்'' என்றான்.

அப்பணியாளன் பேசிக் கொண்டிருக்கும்போதே வித்யாதரனின் முகம் வெளுத்தது. அந்த மணிமாலையின் கதை நினைவுக்கு வந்ததும் அரண்மனை வாசலுக்கு ஓடினான். சிவிகையினுள் நோயினால் நலங் குலைந்து கிடக்கும் தன் அருமை நண்பனைக் கண்டதும் அவன் உடல் பதறியது.

''நண்பா! உனக்கா இந்தக் கதி? ஐயோ! இப்படி நீ துன்பப்படும்போது நான் சுகமாக இருக்கிறேனே'' என்று கதறினான் அவனைக் கட்டிக் கொண்டு. ''அன்று எனக்கு வாழ்க்கை அளிக்க நீ நானாக மாறினாயே. முடியுமானால் இன்று நான் உன் வியாதியை, வேதனையை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வேன். நீ கொடுத்த வாழ்க்கைஅல்லவா இது?'' என்று உருகிப் போன வித்யாதரன் தன் நண்பனின் சிவிகையை அரண்மனைக்குக் கொண்டு வரச் செய்தான். தன் கையாலேயே அவன் ரணங்களுக்கு மருந்திட்டான். அவன் அருகிலேயே கண்ணீர் வழிய அமர்ந்தான் வித்யாதரன். நண்பனின் அன்பிலே தன் வேதனைகளை மறந்தான் ஆனந்தன்.

ஒரு நாள் ஆனந்தன் ஒரு கனவு கண்டான். அதில் ஒரு தேவதை தோன்றினாள். ''உன் கொடிய வியாதி குணமாக வேண்டுமானால் உன் அருமை நண்பன் தன் குழந்தைகள் இருவரையும் தன் கையால் வெட்டி அந்த ரத்தத்தை உன் உடலில் பூச வேண்டும். அப்படிச் செய்தால் நீ பழைய நிலையை அடைவாய்'' என்றாள். ஆனந்தனுக்கு அது கனவானாலும் கூட அதைக் கேட்கவே உடல் நடுங்கியது. தூக்கத்திலேயே ''இதை விட இன்னும் மோசமான நிலை ஏற்பட்டாலும் சரி, சாவதையே நான் விரும்புவேனே தவிர என் அருமை நண்பனிடம் இப்படி ஒரு காரியத்தைச் செய்யும்படி கேட்க மாட்டேன்'' என்று கதறிவிட்டான். நண்பனின் அருகிலேயே இரவு பகலாக அமர்ந்திருக்கும் வித்யாதரனுக்கு ஆனந்தன் தூக்கத்தில் இப்படி விம்மலினிடையே கத்தியது வியப்பாக இருந்தது. கண் விழித்ததும் என்ன என்று கேட்டான். முதலில் ஆனந்தன் அதைச் சொல்ல

மறுத்து விட்டான். ஆனால் வித்யாதரன் விடாப் பிடியாக வற்புறுத்திக் கேட்கவே முடிவில் தான் கண்ட கனவை — அதில் அந்தத் தேவதை கூறியதைச் சொன்னான் ஆனந்தன். ''இது வெறும் கனவு. கனவுகள் உண்மையாகாது'' என்றான்.


வித்யாதரன் தன் நண்பனைச் சமாதானப்படுத்தி மறுபடியும் அவனைத் தூங்கச் செய்தான். ஆனால் வித்யாதரனோ கனத்த நெஞ்சத்துடன் இரவு முழுவதும் நண்பனின் அருகிலேயே அமர்ந்திருந்தான்.


வெள்ளி முளைக்கும் வேளையில் வித்யாதரன் தன் இருப்பிடம் சென்றான். அருமை மனைவி கனகவல்லியை எழுப்பினான். ''கண்ணே! நீராடிவிட்டு ஆலயம் செல். நம் நண்பன் ஆனந்தனின் நோய் தீர மனமுருக ஆண்டவனை வேண்டிக் கொண்டு வா, போ'' என்று கூறி அனுப்பினான். கனகவல்லி கோயிலுக்குப் போனதும் வித்யாதரன் தன் மனசைக் கல்லாக்கிக் கொண்டான். தூங்கும் தன் இரு செல்வங்களையும் வாரி அணைத்தபடி ஆனந்தனின் இருப்பிடம் வந்தான். தாமதிக்கவில்லை. தடுமாறவில்லை. அடுத்த வினாடி வாள் தன் காரியத்தை இரக்கமின்றிச் செய்தது. அருமைக் குழந்தைகளின் குருதியை அள்ளி எடுத்து நண்பன் ஆனந்தனின் உடலில் பூசினான் வித்யாதரன். தேவதையின் வாக்குப் பொய்க்கவில்லை. அடுத்த வினாடியே ஆனந்தனின் உடலை மூடியிருந்த பயங்கரத் தொழு நோய் மறைந்தது. பழைய அழகிய, திடகாத்திரமான உடலைத் திரும்பப் பெற்றான் ஆனந்தன். தனக்காக நண்பன் தன் குழந்தைகளைத் தியாகம் செய்ததை எண்ணிக் கதறினான் ஆனந்தன். தன் உயிர்த் தோழனுக்கு உதவ முடிந்ததே என்ற பெருமையும் அவன் நோய் தீர்ந்ததனால் ஆனந்தமும் அடைந்து மகிழ்ந்து போனான் வித்யாதரன். இருவரும் கோயிலுக்கு விரைந்தார்கள், ஆண்டவனின் அடி பணிந்து அருள் பெற. அப்போதுதான் பிரார்த்தனை முடிந்து வெளியே வந்து கொண்டிருந்தாள் கனகவல்லி. நோயற்ற உடலோடு ஆனந்தனைக் கண்ட அவள் வியந்து மகிழ்ந்து போனாள்.

''இந்த அதிசயம் எப்படி நிகழ்ந்தது?'' என்று கேட்ட மனைவியிடம், ''நீ உள்ளம் உருகப் பிரார்த்தித்துக் கொண்டதினால்தான்'' என்று கூறிய வித்யாதரன். அவளைத் தனியே அழைத்துப் போய்த் தன் நண்பனின் நல்வாழ்வுக்காகத் தான் செய்த காரியத்தை அவளிடம் கூறினான். கணவனின் சொல் கேட்ட கனகவல்லி தன் அருமைக் குழந்தைகளை இழந்ததற்காகக் கண் கலங்கினாலும், ''உங்கள் நண்பருக்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அவருக்கு உதவச் சந்தர்ப்பம் கிடைத்ததில் மகிழ்ச்சிதான்'' என்றாள்.

கணவனுக்கு ஏற்ற உத்தம மனைவி அவள். ஆனாலும் பிள்ளைப் பாசம் கெல்லி எடுத்தது. விம்மலுடன் ஓடினாள் அரண்மனைக்கு, உயிரற்ற உடலையாவது காண வேண்டும் என்ற துடிப்போடு. உள்ளே நுழைந்தவளுக்கு வியப்பான வியப்பு. குழந்தைகளின் சிரிப்பொலி கேட்டது கணீரென்று. படுக்கையில் உட்கார்ந்தபடி குழந்தைகள் இரண்டும் விளையாடிக்கொண்டிருந்தன. அம்மாவைக் கண்டதும் கை நீட்டித் தாவி வந்து கட்டிக் கொண்டன. கனகவல்லியின் களிப்புக்குக் கேட்க வேண்டுமா? அவளால் பேச முடியவில்லை. பார்வையைக் கண்ணீர் மறைத்தது. இரு குழந்தைகளையும் அள்ளி அணைத்துக்கொண்டவள் ஆண்டவனின் கருணையை எண்ணி விம்மி அழுதாள், ஆனந்தப் பொருக்கினால்.

நட்புக்கு இலக்கணமான ஆனந்தனும் வித்யாதரனும் நெடுங் காலம் சந்தோஷமாக வாழ்ந்திருந்தார்கள்.





டூன் பள்ளிக்கூடம்

சோமலெ

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? பொறுப்பான அரசாங்கப் பதவி வகிக்க, சிறு வயதிலேயே பயிற்சி வேண்டும். இதற்காக இங்கிலாந்தில் விசேஷப் பயிற்சியளிக்கும் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன.

இந்தியச் சூழ்நிலைக்கேற்பப் பாடத் திட்டத்தில் மாறுதல்களுடன் நம் நாட்டிலும் இத்தகைய நிலையங்கள் உள்ளன. இவற்றுள் புகழ் பெற்ற ஒரு பள்ளி டூன் ஸ்கூல். இமயமலை அடிவாரத்தில் அமைந்த அழகான மலை நகரம் டேரா டூன். ஏராளமான காடுகள், காட்டியல் ஆராய்ச்சி நிலையம், போர்ப் படைக் கல்வி நிலையங்கள், ரோஜா மலர்த் தோட்டங்கள் இந்நகரத்தில் உள்ளன.

இங்குள்ள டூன் ஸ்கூல், சிறந்த அறிஞர்களையும், அரசியல்வாதிகளையும் உருவாக்கியிருக்கிறது. 1971ல் இந்தியா—பாகிஸ்தான் போரில் இந்தப் பள்ளியில் படித்த பலர் ராணுவ வீரர்களாய் அரும் பங்கு ஆற்றினர். வீரப் பதக்கங்கள் பெற்றனர். பெற்ற தாய்க்கும் பிறந்த பொன்னாட்டுக்கும் அவர்கள் செய்த பணி பெரிது.

12 முதல் 18 வயது வரையில் ஆறு ஆண்டுகளுக்குக் கல்வி கற்பிக்கப்படுகிறது. ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் சரளமாகப் பேசவும் எழுதவும் படிக்கவும் பழகுகிறார்கள். முதல் இரு ஆண்டுகள் சம்ஸ்கிருதமும் சொல்லிக் கொடுக்கப் படுகிறது. மனப்பாடம் செய்வது என்பது இந்தப் பள்ளியில் இல்லை. தெரிந்து, புரிந்து படிக்க வேண்டும் என்பதே குறிக்கோள்.

ஏட்டுச் சுரைக்காயாக மாணவர்கள் உருவாவது இங்கே கிடையாது. பலருடன் பழகியும் பல இடங்களை நேரில் பார்த்தும் கலைப் பொருள்களைச் சேகரித்தும் பொழுதுபோக்குப் பழக்கங்களின் மூலமும் பரவலான பொது அறிவை வளர்க்கிறார்கள். இதற்கேற்பப் பல்கலைக் கழகங்களில் இருப்பதை விடக் கூடுதலான வசதிகள் இப்பள்ளியில் இருக்கின்றன என்றால் அது உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை. அறிவியல் சாதனைகள் — சோதனைகள், ஹரப்பா — மொஹஞ்சதாரோ போன்ற புதைந்த நகரங்கள் வரலாற்று நிகழ்ச்சிகள், பிற நாடுகளின் வளர்ச்சி பற்றிய திரைப் படங்களைப் பள்ளியில் காட்டுகிறார்கள். இசை—நாடக நிகழ்ச்சிகளும், கருவிகளைப் பயன்படுத்துவது போன்ற வேலைக்கூடப் பயிற்சிகளும் நிகழ்கின்றன.

விடுதிகளில்தான் மாணவர்கள் தங்க வேண்டும். காஷ்மீர், ஹைதராபாத், டாட்டா என்ற பெயர்களில் ஆறு விடுதிகள் உள்ளன. ஒரு விடுதியில் 55



பேர்கள் வைக்கப்படுகிறார்கள். ஆசிரியரின் நேரடிக் கண்காணிப்பில் மாணவரின் அன்றாட வாழ்வு நடைபெறுகிறது.

பாடங்களோடு விளையாட்டுக்கும் முக்கியத்துவம் உண்டு. கிரிக்கெட், கால் பந்து, உடற்பயிற்சி மட்டுமல்லாமல் என். சி. சி.யும் கட்டாய பாடமாக இருந்து வருகிறது. மலை ஏறும் பயிற்சி, மேடான பகுதிகளில் சைக்கிள் ஓட்டுதல், மீன் பிடிப்பது, காடுகளில் மிருகங்களைச் சுடுவது ஆகிய போட்டிகளும் உண்டு. இத்தகைய பயிற்சிகளால் திடகாத்திரர்களாக, பாரதத்தைக் காக்கும் வீரர்களாக வெளி வருகிறார்கள். இம்மாதிரியான பள்ளிகள் நம் நாட்டில் இன்னும் பலப்பல ஆங்காங்கே ஏற்படுமானால் பாரதப் பிரஜை பார் புகழும் வண்ணம் உயர்ந்து விடுவான்.

பாடங்கள் விளையாட்டுக்கள் மட்டும் தானா? பண்பாடும் இங்கு இளமையிலேயே கற்றுத் தரப்படுகிறது. கட்டுப்பாடு நாட்டுக்கு எவ்வளவு நல்லது என்பது இளைஞர்களுக்கு இளமையிலிருந்தே வலியுறுத்தப்படுகிறது.

இப்பள்ளியில் இடம் கிடைப்பது குதிரைக் கொம்பு. கிடைத்தாலும் ஓராண்டுக்கு ரூ. 3000 கட்ட எல்லோராலும் முடியுமா? பயணம், உடை போன்ற செலவுகளுக்கு மேலும் ஆயிரம் ரூபாய் வேண்டும். மந்திரிகள் மற்றும் பணச் செழிப்பு உள்ளவர்களுக்கு மட்டுமே ஏற்பட்ட பள்ளி இது. சோசலிஸ சமுதாயத்தில் எல்லோருக்கும் இங்கு பயில வசதி வேண்டும் என்பதற்காக, 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இந்தியாவெங்கும் பரீட்சை வைத்து அந்தத் தேர்வில் வெற்றி பெறும் சிலருக்கு இந்திய அரசு எல்லாச் செலவும் கொடுத்து இங்கு படிக்க வைக்கிறது. நீங்களும்தான் முயன்று பாருங்களேன்.







இடப்பக்கம் மேலே: டூன் பள்ளியில் ஆர்க்கெஸ்ட்ரா பயிலும் மாணவர்கள்.

கீழே: மாணவர்கள் கலை வகுப்பில் சிலை வடிக்கப் பழகுகிறார்கள்.

வலப்பக்கம் மேலே: பிரதான மைதானத்தில் உடற்பயிற்சி நடைபெறுகிறது.



கதை
வாண்டு மாமா
ஷீலாவைக் காணோம்
சித்திரம்
ரமணி
7
ஷீலாவின் பிரார்த்தனை வீண் போகவில்லை. அக் கொடியவர்களால் அவளைக் கண்டு பிடிக்க முடியவில்லை. இரவு அப்படியே கண்ணயர்ந்து போனாள் ஷீலா.
பாவம் தூங்கட்டும். அவள் எழுந்திருப்பதற்குள் அவள் பசிக்கு ஏதாவது கொண்டு வர வேண்டும்.
இந்தக் கானகத்தில் என்ன கிடைக்கும்? வேறு எங்கே போவது? அந்தத் திருடர்களின் இருப்பிடத்துக்கே போகலாம்.
எங்கோ கிளம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வேளை ஷீலாவைத் தேடித்தானோ? நாம் ஓசையின்றி உள்ளே போகலாம்...
கடையிலிருந்து சாமான் வாங்கி வரப் பழக்கப்பட்டது டைகர். ஒரு பையில் உணவுப் பொருள்களைக் கௌவி எடுத்துச் சேமித்துக் கொண்டிருந்த போது கால் தவறி...
அடடா, கால் பட்டு இந்தப் புட்டி கீழே விழுந்து விட்டதே.
ஓசை கேட்டு அவர்கள் உள்ளே வருவார்கள் என்று எதிர் பார்த்துக் கதவுக்குப் பின் பதுங்கிக் கொண்டது டைகர். எதிர் பார்த்தபடி ஒருவன் உள்ளே வர அவன் மீது பாய்ந்தது டைகர்...




எதிர்பாராத தாக்குதலால் தலை குப்புற விழுந்தவனைத் தாண்டிக் கொண்டு வாயில் கௌவிய உணவுப் பையுடன் வெளியே ஓட்டமெடுத்தது டைகர்...
என்னைத் தேடு கிறான் மடையன். நான் அங்கேயே இருப்பேனு அவனிடம் சிக்கிக் கொள்ள? ஷீலா கண்ணு விழித்துக் கொண்டிருப்பாள். சீக்கிரம் போக வேண்டும்...
ஷீலா கண் விழித்ததும்...
ஐயோ, என் டைகரைக் காணோமே எங்கே போயிருக்கும்? ஆ!
டைகரைக் கண்ட ஷீலா அளவு மதிக்கத்தியான மகிழ்ச்சி...
உனக்குப் பசியும் தக்திறுய மட்டும் ஆண்டவன் அளிந்த, திருப்பாதிருக்கும்... ஆஹா! என்ன அருமை நண்பா. இந்தா நீயும் சாப்பிடு. என் மீது தான் உனக்கு எத்தனை அன்பு?
எங்கே அழைத்துப் போகிறாய்? இரவில் நம்மைக் கண்டு பிடிக்க முடியாதவர்கள் இப்போது தேடி வருவார்கள். அவர்களின் பார்வையில் சிக்காத படி போக வேண்டும் உனக்குத் தெரியாதா என்ன?

சுண்டு குண்டு சீமாத் தாத்தா

சாமா





''விடுமுறைக்கு எங்கேடா போகலாம்? ஊட்டியில் கொஞ்ச நாளும் கோடைக் கானலில் கொஞ்ச நாளும் போய் இருந்தால் ஜோராய் இருக்கும்டா!'' என்றான் குண்டு.

''ஓ! ஜோராக இருக்குமே. நம்ம சிநேகிதன் சோமு வீட்டில் எல்லோரும் போகப் போகிறார்கள். ரயில் சார்ஜ் மட்டும் கொண்டு வந்தால் அவர்களுடன் தங்கியிருக்கலாமாம். சோமு சொன்னான்டா'' என்றான் குண்டு.

''எப்படிடா முடியும்? தாத்தா இதற்குச் சம்மதிக்கணுமே?'' என்றான் சுண்டு.

''எதற்கும் கேட்டுப் பார்க்கலாமே'' என்றான் குண்டு.

''பயமா இருக்குடா. எப்படிடா கேட்கறது?'' என்று தாத்தாவின் அறைக் கதவை மெல்லத் திறந்து பார்த்தனர் இருவரும். தாத்தாவைக் காணோம். டிரான்ஸிஸ்டரிலிருந்து மட்டும் யாரோ கதா காலட்சேபம் செய்து கொண்டிருக்கும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. ''டிரான்ஸிஸ்டரை அணைக்கத் தாத்தா மறந்து போயிட்டார் போலிருக்கு. நாம் நிறுத்தி விடலாம்'' என்று அதை நிறுத்தி விட்டார்கள்.

''டேய்! எனக்கு ஓர் ஐடியா! தாத்தாவை எப்படிக் கேட்பது என்று நாம் ஒத்திகை பார்க்கலாம். நீதான் தாத்தாவாம். நான் உன்னைப் பயத்தோடு ஊருக்குப் போக அனுமதி கேட்கிறேனாம். நம் ஒத்திகை ஒழுங்காக அமைந்தால் தாத்தாவிடம் தைரியமாகக் கேட்கலாம்'' என்றான் சுண்டு.

நாடகம் தொடங்கியது.

சீமாத் தாத்தாவாகக் குண்டு நாற்காலியில் உட்கார்ந்திருந்தான்.

''தாத்தா!'' என்றான் சுண்டு, தலையைச் சொறிந்தவாறு.

''உம், என்ன?'' என்றார் தாத்தா குண்டு அழுத்தலாக.

''நீங்கள் கிழித்த கோட்டை நாங்கள் தாண்டியிருக்கோமா?'' இது சுண்டு.

''நான் கோடு கிழிக்கவுமில்லை, நீங்கள் தாண்டவுமில்லை.''

''உங்க சதாபிஷேகத்தை நாங்கள் முன்னின்று நடத்தி வைத்தோமே!''

''ஆமாம், ஆமாம், அழைப்புக் கடிதங்களை மட்டும் போஸ்ட் செய்யவில்லை அவ்வளவுதான்.'' இப்படித் தொடர்ந்த ஒத்திகை ஒரு வழியாக முடிந்தது. அதே சமயம் தாத்தாவும் வந்தார். வந்தவர் தம் அறைக்குள் போய்க் கதவைச் சாத்திக் கொண்டார். கொஞ்ச நேரத்தில் வெளியே வந்தார்.

''டேய், பசங்களா, இந்தக் கோடை விடுமுறைக்கு நாம் ஊட்டிக்கும், கோடைக்கானலுக்கும் போகப் போகிறோம். தெரிந்ததா!'' என்றார் சீமாத் தாத்தா. சுண்டுவும் குண்டுவும் மூச்சு முட்டச் சிலையாக நின்றார்கள்.


''என்னடா! பேசாமே முழிக்கறேள்? என் சதாபிஷேகத்தை நடத்தி வச்சது நீங்கதானே? அதற்கு உங்களைக் கௌரவிக்க வேண்டாமா?'' என்றார் தாத்தா. சு. கு.வுக்கும் மயக்கம் வராத குறை.

''இதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும் என்று நினைக்கிறீர்களா? இதோ பாருங்கள்!'' என்று உள்ளே போய் மேஜை மீதிருந்த டேப் ரிகார்டரைப் போட்டார். அதிலிருந்து இவர்கள் ஒத்திகை பார்த்தது அப்படியே மறுபடியும் ஒலித்தது. பையன்கள் திணறிப் போனார்கள்.

''டிரான்ஸிஸ்டரிலிருந்து கதாகாலட்சேபத்தை ரிக்கார்ட் செய்ய அதன் அருகிலேயே டேப் ரிகார்டரையும் திறந்து வைத்திருந்தேன். டிரான்ஸிஸ்டரை நிறுத்திய நீங்கள் டேப் ரிகார்டரை மூடவில்லை. உங்கள் ஒத்திகை அப்படியே இதில் பதிவாகி விட்டது. அது சரி. சோமுவோட அப்பாவுக்கு அவர்கள் ஊட்டி கொடைக்கானல் போக நான் தான் கடன் தரப் போகிறேன். அப்படி இருக்க உங்களை அவர்களுடன் அனுப்புவானேன்? நானே உங்களை அழைத்துப் போகிறேனே'' என்ற தாத்தாவைக் குண்டுவும் சுண்டுவும் கட்டிக் கொண்டு இரு பக்கங்களிலும் தொங்கினார்கள்.







காட்டிலே ஒரு கூட்டம்!

சேனையின் மாதவன்

காட்டு மிருகம் எல்லாம் கூடிக் கூட்டம் போட்டன
வீட்டு மிருகம் கூட அங்கே விருந்தாய் வந்தன
நாட்டு மக்கள் எல்லாம் பார்த்து நாணம் கொள்ளவே
காட்டுக் குள்ளே திட்டம் ஒன்று வேண்டுமென்றன

சிட்டுக் குருவி பறந்து சென்று சேதி சொன்னது
பட்டுக் கிளியும் வண்ண வாயால் பேசி வந்தது
காலை வேளை மலரும் போது கானகத்தின் நடுவிலே
சோலைமலைப் பறவையெல்லாம் பாடி வந்தன.


சில்லு வண்டு இரண்டு கூடிச் சுருதி மீட்டின
அல்லி வண்டு இரண்டு வந்து அழைப்பு விடுத்தன
இனிமை யொலி குயிலிரண்டு இறை வணக்கமாய்த்
தனிமை யான மயிலும் வந்து நடன மாடின

தலைவரான சிங்க ராஜா அவையிலே வந்தார்
புலமை நரி அண்ணா வர வேற்புக் கூறினார்.
கழுதை முதல் பேச்சாளர்கள் கணக்கில் லாமலே,
பழுதில் லாமல் பேசி விட்டுப் போய் அமர்ந்தனர்

குரங்குத் தம்பி ஓடிவந்தான் கும்மாளத் தோடு
உறங்கு கின்ற மிருகம்கூட எழுந்து கொண்டது
மரத்தி லேறி வித்தை காட்டி பல்டி அடித்தான்
வீரத்தினால் கிளைகள் மீது தாவிக் குதித்தான்

குள்ள முயல் ஒன்று வந்து கதைகள் சொன்னது
முள்ளம் பன்றி பின்னால் வந்து ஆடிச் சென்றது
ஆட்டுக் குட்டி புலிகளோடு மேடை ஏறியே
நாட்டத் தோடு நால் வகையில் ஆட்டம் போட்டன

கீரி பாம்பு இரண்டும் வந்து தோழர்களாக
எறியந்த மேடைமீது மகிழ்ந்து ஆடின
நாய் அவர்கள் அங்கே வந்து நன்றி கூறவே
போய்க்கொண்டே மிருகமெலாம் வாழ்த்துப் பாடின







பிறந்த கதை:

டைப்ரைட்டர்

நவீன வசதிகள் கொண்ட இன்றைய அலுவலகம் ஒன்றில் டைப்ரைட்டர் யந்திரம் இல்லாமல் இருக்குமானல் அது எப்படி இருக்கும்? கற்பனை செய்து பாருங்கள். தட்டெழுத்து யந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு நூறு வருஷங்களே ஆகின்றன. அச்சுக் கலை அதற்கு முன்பு தோன்றிவிட்டது. ஆனல் அது செய்திப் பத்திரிகைகளுக்கும் புத்தகம் தயாரிப்பவர்களுக்கும்தான் பயன்



பட்டது. வியாபார சம்பந்தமான கடிதங்கள் கணக்குகள் ஆகியவைகளைக் கையாலேயேதான் எழுதி வந்தார்கள். கணக்குப்பிள்ளை என்றும் ரைட்டர்கள் (எழுத்தர்) என்றும் இதற்காகவே பலர் தொழிலகங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள். அழகாகத் தெளிவாக எழுதக் கூடியவர்களுக்கு மிக்க மதிப்பு. இறகு பேனவினல் எழுத ஆரம்பித்து இரும்புப் பேனவரையில் குமாஸ்தாக்கள் கடிதங்களையும் கணக்குகளையும் கையாலேயே எழுதி வந்தார்கள். 'கையால் எழுதுவதை யந்திரம் கொண்டு எழுத முடியுமானல்' என்ற எண்ணத்துக்கு ஒரு சாதனத்தை உருவாக்கிக் காட்டியவர் ஓர் ஆங்கிலேயர். பதினெட்டாம் நூற்ருண்டில் இங்கிலாந்தில் வாழ்ந்த **ஹென்ரி மில்** என்ற பொறியாளர்தான் இவர். 1714ல் தாம் தயாரித்த யந்திரத்தை உரிமைப் பதிவு செய்து கொண்டார்.

ஓர் உருளையின் பக்கங்களில் ஒரே நீளத்தில் பல உலோகக் குச்சிகள் பொருத்தப் பட்டிருக்கும். குச்சிகளின் முனையில் ஒவ்வோர் எழுத்தும் (இடம் வலமாக) இருக்கும். எழுத்துக் குச்சிகளைப் பொருத்தி உருளையைச் சுழற்றும்போது கீழுள்ள காகிதத்தில் எழுத்துகள் தங்கள் உருவத்தைப் பதிக்கும். ஆனல் ஹென்ரி மில்லின் இந்த யந்திரத்துக்கு அப்போது அதிகத் தேவை இருக்கவில்லை. இதன் பிறகு பல ஆண்டுகள் வரை எழுதுகோலின் ஆட்சிதான் நடைபெற்று வந்தது. பேனவுக்குப் போட்டியாக யந்திரம் கண்டுபிடிக்கும் எண்ணம் யாருக்கும் ஏற்படவில்லை. ஆனல் மனித வாழ்க்கையில் வேகம் ஏற்படத் தொடங்கிவிட்டது. எதையும் விரைவாகச் செய்து முடிக்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்படலாயிற்று. இந்த நிலையில் மறுபடியும் கையால் எழுதும் தொல்லையைக் குறைக்க ஒரு யந்திரம் தயாரிக்க வேண்டும் என்ற எண்ணம் ஓர் அமெரிக்கருக்கு உண்டாயிற்று. அவர் பெயர் **வில்லியம் பர்ட்.** 1829ம் ஆண்டில் பர்ட் ஒரு யந்திரத்தைத் தயாரித்தார். இது ஒரு மாதிரியான டைப்ரைட்டர். ஆனல் பர்ட் இதை 'டைபோ கிராபர்' என்று அழைத்தார். ஓர் எழுத்தையோ எண்ணையோ டைப் செய்ய இரண்டு தடவைகள் இயங்க வேண்டும். முதலில் தேவையான எழுத்துக்கு டயலில் உள்ள பொத்தானை அழுத்த வேண்டும். பிறகு அது காகிதத்தில் அச்சடிக்க ஒரு லீவரை இழுக்க வேண்டும். இம்முறையால் கையால் எழுதுவதை மிஞ்சுமளவுக்கு வேகம் ஏற்படவில்லை. ஆகவே பர்ட்டின் 'டைபோ கிராபர்' முன்னேற்றம் அடையவில்லை.

1843ல் ஐக்கிய அமெரிக்காவின் மாஸாசூஸெட்ஸ் மாகாணத்தைச் சேர்ந்தவரான **சார்லஸ் தர்பர்** ஒரு யந்திரத்தை உருவாக்கினர். ஒரு பெரிய டிரம். இதைக் கையால் சுழற்றலாம். அப்படிச் செய்யும்போது தேவையான எழுத்துக்கள் குறிப்பிட்ட இடத்துக்கு வரும் ஓர் அமைப்பு அதில் இருந்தது. அப்படி அந்த எழுத்து வந்ததும் கீழே உள்ள உருளையில் சுற்றப்பட்டிருக்கும் காகிதத்தில் டிரம்மை அழுத்தினல் குறிப்பிட்ட எழுத்து மட்டும் காகிதத்தில் தன் அச்சைப் பதிக்கும். இன்று உலோகத் தகடுகளில் வார்த்தைகளைப் பொறிக்கும் யந்திரமான 'ரோலர் பிளாட்ட'னுக்கு இது முன்னேடியாக அமைந்தாலும் எழுதுகோலின்




வேகத்தை மிஞ்சும் யந்திரமாக இது ஏற்படவில்லை. இதற்குள் தந்தி முறை புழக்கத்துக்கு வந்து விட்டது. மோர்ஸ் முறைக் குறியீடுகளை விளக்கிக் கையால் எழுதுவோர் அவற்றை எழுதுவதைக் காட்டிலும் வேகமாகப் படித்து அறிந்து கொள்ள முடிந்தது. அலுவலகங்களில் சுருக்கெழுத்து முறையும் கையாளப்பட்டது. ஆனாலும் அவைகளை மறுபடியும் விளக்கமாக எழுதுவதற்குப் பேனாவினால் எழுதும் முறையே இருந்து வந்தது. வியாபார நிறுவனங்கள், அரசாங்கம், தொழிற்கூடம் எங்கும் பேனாப் பிடித்துக் கையால் எழுதுவது நேரத்தை விழுங்கும் வேலையாகக் கருதப்பட்டது. மிக மிக வேகமாக எழுதக் கூடியவர்களால் கூட நிமிஷத்துக்கு முப்பது வார்த்தைகளுக்குமேல் எழுத முடியாது. இந்த நிலையில் புதுமை காணும் நிபுணர்களிடையே எழுதுகோலை ஒழித்து எழுதும் யந்திரம் காண வேண்டும் என்ற ஆர்வமும் முயற்சியும் பெருகியது.


1867க்குள் எழுதுகோலைப் புறக்கணிக்கப் பல விதமான யந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் எதுவுமே கையால் எழுதுபவரை மிஞ்சும் படியாக அமையவில்லை. எழுத்தர்களைக் காட்டிலும் மந்தமாக இயங்கின சில. இம்மாதிரியான புதிய எழுதும் கருவிகளைப் பற்றிய கட்டுரைகளைப் பத்திரிகையில் படித்தார் விஸ்கான்ஸின் மாகாணவாசியான ஒருவர். இவரது பெயர் **கிறிஸ்டபர் ஷோல்ஸ்.** அப்போது அவருக்கு வயது நாற்பத்தெட்டு. மில்வாக்கி நகரில் சுங்க அதிகாரியாகப் பணி புரிந்து வந்தார். ஆரம்ப நாட்களில் பத்திரிகாசிரியராக வாழ்க்கையைத் தொடங்கியவர் இவர். புதிய கருவிகளைக் கண்டுபிடிப்பதைப்



< 1714ல் பிரிட்டிஷ் எஞ்சினீயர் ஹென்றி மில் உருவாக்கிய முதல் யந்திரம் இதுதான்.

1829ல் வில்லியம் பர்ட் என்பவர் தயாரித்த 'டைபோகிராப்ஃ' யந்திரத்தின் தோற்றம். V





Λ ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த மாஸா சூ ஸெட்ஸ் மாகாணத்தவரான சார்லஸ் தர்பர் 1843ல் தயாரித்த எழுதும் கருவி.

< கிறிஸ்டபர் ஷோல்ஸ் உருவாக்கித் தந்த இன்றைய தட்டெழுத்து யந்திரத்தின் முன்னோடி இந்தக் கருவிதான். 'ஷோல்ஸ் டென்ஸ்மோர்' என்று இதற்கு அவர் பெயரிட்டார்.

பொழுது போக்காகக் கொண்டவர். புத்தகங்களின் பக்கங்களுக்கு எண் அச்சிடும் நம்பரிங் மிஷினைக் கண்டுபிடித்திருந்தார். அச்சை மாற்றாமல் நோட்டுப் புத்தகங்களில் பக்க எண்களை விரைவாகப் பதிக்க இது உதவியாக இருந்தது. இப்படி எண்களை அச்சிடுவது போல் எழுத்துக்களையும் அச்சிட ஒரு கருவியைக் கண்டுபிடித்தால் என்ன என்ற எண்ணம் தோன்றியது ஷோல்ஸுக்கு. அவரது நண்பர்கள் உற்சாகப்படுத்தினார்கள். ஷோல்ஸ் இதே நினைவாக முழுமூச்சுடன் தட்டெழுத்து யந்திரம் அமைப்பதில் ஈடுபடலானார். இவருக்கு உதவியாகக் கிளைடன் என்பவர் ஒத்துழைத்தார்.

1867-க்கும் 1873-க்கும் இடையே ஷோல்ஸ் முப்பது வகையான எழுதும் யந்திரங்களை உருவாக்கினார். முதல் யந்திரத்துக்கு அவர் சூட்டிய பெயர் தான் 'டைப்ரைட்டர்'. இக்கருவி 'டபிள்யு' என்னும் ஓர் எழுத்தை மட்டுமே டைப் அடித்தது. சில மாதங்களுக்குள் ஆங்கில எழுத்துக்கள், எண்கள், மற்றும் குறிப்பீடுகள் அத்தனையையும் டைப் அடிக்கும் வகையில் ஒரு கருவியை உருவாக்கி விட்டார் ஷோல்ஸ். அத்துடன் திருப்தியடைந்து விடவில்லை. மேலும் பல மாதங்கள் ஆராய்ந்து ஆராய்ந்து அதில் புதுப் புதுக் கருவிகளைப் பொருத்தினார். காகிதம் வைக்கும் உருளை, வரிக்கு வரி இடைவெளி விடும் முறை, அச்சுப் பொறிக்கு மை ஏற்றிய நாடா, எந்த எழுத்தை அடித்தாலும் தாளின் ஒரே இடத்தில் அது வந்து பொருந்துமாறு அமைந்துள்ள வகை முதலியனவெல்லாம் அன்று ஷோல்ஸ் கண்ட முறைப்படியே இன்றும் டைப்ரைட்டர்களில் உள்ளன. எழுத்கனின் தொல்லை அகலத் தோன்றிவிட்டது ஒரு யந்திரம். நடைமுறைக்கு உதவக் கூடிய வகையிலும் வியாபார ரீதியிலும் உற்பத்தியான முதல் தட்டெழுத்து யந்திரத்தை அமைத்தவர் கிறிஸ்டபர் ஷோல்ஸ்தான்.

டைப்ரைட்டர் தோன்றியதனால், பெண்களின் வாழ்வில் ஒரு புதிய சகாப்தமே தோன்றியது. அலுவலகப் பணிகளுக்கு ஆண்கள் மட்டுமே என்ற நிலையை டைப்ரைட்டர் மாற்றி அமைத்தது. காரியாலயங்களில் தட்டெழுத்தைக் கையாளும் தகுதி பெண்களுக்கு அதிக அளவில் அமைந்ததினால் அவர்கள் வாழ்வுக்கு ஒரு வழி ஏற்படுத்திக் கொடுத்த பெருமை இந்த யந்திரத்துக்கு உண்டு.


தையல் யந்திரம், வேளாண்மைக் கருவிகள், துப்பாக்கிகள் முதலியவற்றை உற்பத்தி செய்து வந்த **ரேமிங்டன்** என்ற ஸ்தாபனம் 1873ல் ஷோல்ஸின் டைப்ரைட்டர் கருவியையும் உற்பத்தி செய்யலாயிற்று.

ஆரம்ப காலத்தில் (1873ல்) ஒரு வரி டைப் செய்ததும் ரோலர் அதே இடத்துக்குத் திரும்ப வருவதற்குக் காலால் இயக்கும் வகையில் பெடல் இருந்தது டைப்ரைட்டரில். அது மட்டுமல்ல. டைப்ரைட்டர்களெல்லாம் ('காப்பிடல்' மட்டும்) ஒரே ஒரு வகை எழுத்துக்களை மட்டுமே அச்சடிப்பதாக இருந்தன. இதற்கு ரெமிங்டன் நெ. 1. என்று பெயர். ரெமிங்டன் நெ. 2 என்ற யந்திரம் 1878ல் உருவானபோதுதான் பெரிய எழுத்து சிறிய எழுத்து (காப்பிடல், லோயர்) இரண்டுமே டைப் அடிக்கக்கூடிய வகையில் அமைந்தது. நாளாவட்டத்தில் இன்னும் எத்தனையோ மாற்றங்களைக் கண்டது ஷோல்ஸின் டைப்ரைட்டர். சப்தமே இல்லாமல் டைப் செய்யும் நவீன யந்திரத்தையும் (1924) மின்சாரத்தினால் இயங்கும் டைப்ரைட்டரையும் (1925) தயாரித்தளித்த பெருமை ரெமிங்டன் நிறுவனத்துக்குத்தான் உண்டு.

1881ல் நியூயார்க் பள்ளி ஒன்று பெண்களுக்கு இந்த யந்திரத்தில் பயிற்சி அளிக்க முன் வந்தது. இந்த யந்திரத்தினால் நிமிஷத்துக்கு அறுபது வார்த்தைகளும் வல்லவனானால் எண்பது வார்த்தைகளும் தட்டலாம். இன்று மூன்று அங்குல உயரத்தில் ப்ரீஃப் கேஸுக்குள் எடுத்துச் செல்லும் கனமற்ற போர்ட்டபிள் டைப்ரைட்டர்களும் இருக்கின்றன. இன்றைய நாகரிக வாழ்வில் அலுவலகங்களுக்குத் தட்டெழுத்து ஓர் இன்றியமையாத அம்சமாகிவிட்டது.

— **கிருஷ்ணவேணி**

காப்பியடிக்கிறதுக்கு அளவே கிடையாதா ?





482. சஃப் (Chough) என்று ஒரு பறவை. அது எப்படி இருக்கும், எந்த இனத்தைச் சேர்ந்தது என்று தெரியுமா?

483. 'கானகத்தின் காவல்காரன்' என்பது ஒரு பறவைக்குப் பெயர். அது எந்தப் பறவை?

484. கீழ்க்கண்டவைகளோடு கொதி நீரைக் கலந்தால் எதில் நீர்க்குமிழிகள் கிளம்பும்? பேக்கிங் பவுடர், ஈஸ்ட், சர்க்கரை, வாஷிங் சோடா.

485. வைரங்களை எதனால் வெட்டி எதனால் பாலிஷ் கொடுக்கிறார்கள்?

486. நிலக்கரி வாயுவில் உள்ள இரண்டு வாயுக்கள் என்னென்ன?

487. புகழ் பெற்ற புத்தகமான 'ராபின்ஸன் குருஸோ'வின் கதாநாயகன் கற்பனைப் பாத்திரமா, நிஜமா?

488. கவிகளின் கவி என்று ஆங்கில இலக்கியத்தில் புகழப்படுபவர் யார்?

489. கீழுள்ள வார்த்தைகள் ஒவ்வொன்றுக்கும் மூன்று வகை விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. அவைகளில் எது சரியான விளக்கம் என்று சொல்ல முடியுமா? (A) டாக்ஸி டெர்மிஸ்ட் (Taxidermist) — 1. டாக்ஸிகளை வாடகைக்குத் தரும் நிறுவனம்; 2. இறந்த பிராணிகளின் உடலுக்குள் பஞ்சடைப்பவர்; 3. பூச்சிகளைச் சேகரிப்பவர்.
(B) அக்கோலேடு (Accolade) — 1. தையல் கலையில் ஒரு முறை; 2. கட்டிடங்களில் உள்ள வராந்தாவில் ஒரு வகை; 3. உயர்ந்த ஸ்தூபிகளின் உச்சியைச் சிங்காரித்தல்.
(C) ஸோலேரியம் (Solarium) — 1. ஒரு சிட்டாட்டம்; 2. சூரிய ஒளியைக் கணக்கிடும் கருவி; 3. சூரிய ஒளியைத் தேக்கி வைக்கும் ஒரு கண்ணாடி அறை.

490. சரியா தவறா? — A. அந்த விஞ்ஞானி அவ்வைரத்தை லித்தாஸ்கோப்பின் உதவியால் பரிசீலனை செய்தார். B. பிக்காஸோ பிரபலமான இத்தாலிய நாட்டுச் சித்திரக்காரர்.

491. நீங்கள் தபால் தலை சேகரிப்பவர்களானால் அதில் ஒரு தபால் தலையில் ஹெல்விஷியா என்று ஒரு நாட்டின் பெயர் குறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். அது எந்த நாடு?

492. ஐரோப்பாவில் உள்ள மிகப் பெரிய ஏரிகள் எவை?

493. இங்கிலாந்தின் சரித்திரம் படித்தவர்களுக்கு டூம்ஸ்டே புத்தகம் என்றால் என்ன என்று தெரியும். இது எந்த மன்னரின் ஆட்சியின்போது எழுதி முடிக்கப்பட்டது என்று தெரியுமா?

494. ஒரு விளையாட்டில் 'புல்லியிங் ஆஃப்' என்ற பதம் பயன்படுத்தப்படும். அந்த விளையாட்டு என்ன? அதன் பொருள் என்ன?


495. விளையாட்டு உலகில் டிகாத்லான் (Decathlon) என்பது பத்து நிகழ்ச்சி நிரல்களைக் கொண்டது. அவை என்னென்ன என்று சொல்லுங்கள் பார்க்கலாம்.

496. சோதனைக் கூடத்தில் லிட்மஸ் காகிதம் அமிலத்தில் எவ்வித மாற்றத்தைத் தரும்?

விடைகள்: 482. காக்கை இனத்தைச் சேர்ந்தது. மலைகளில் வசிக்கும் சிறிய பறவை. நிறம் கறுப்பு. கால்கள் சிவப்பு. நீண்டு வளைந்த சிவப்பான அலகு. 483. ஜே (Jay) ஏனென்றால் இது எப்போதும் அபாயக் குரல் எழுப்பிக்கொண்டிருக்குமாம். 484. ஈஸ்ட்டுடன் கலக்கும்போது. 485. வைரத்தை வைரத்தால்தான் வெட்ட முடியும். வைரத் தூள்களைக் கொண்டு பாலிஷ் கொடுக்கிறார்கள். 486. ஜல வாயு, மீதேன் என்ற வாயு. 487. அநேகமாக நிஜ வாழ்க்கையே. அலெக்ஸாண்டர் ஸெல்கிர்க் என்ற ஸ்காட்லாந்துக்கார மாலுமிக்கு ஏற்பட்ட சொந்த அனுபவங்கள் அவை. 488. ஷெல்லி. 489. (A)–2 (B)–1 (C)–3 490. A. சரி. வைரங்களைப் பரிசீலிக்கும் கருவிக்கு லித்தாஸ்கோப் என்று பெயர். B. தவறு. பிக்காஸோவின் தாய்நாடு ஸ்பெயின். 491. ஸ்விட்சர்லாந்து. லத்தீன் மொழியில் ஹெல்விஷியா என்றால் ஸ்விஸ் நாடு. 492. லாடோகாவும் ஒனேகாவும். 493. முதலாம் வில்லியம் காலத்தில். 494. ஹாக்கி மாட்சில். அதை ஆரம்பிப்பதற்கு அடையாளமாகப் பயன்படுத்தப்படும் வார்த்தை. 495. 100 மீட்டர் ஓட்டம், 400 மீட்டர் ஓட்டம், 1500 மீட்டர் ஓட்டம், வட்டு எறிதல், ஈட்டி எறிதல், ஷாட்புட், லாங் ஜம்ப், ஹைஜம்ப், போல்வால்ட், 110 மீட்டர் ஹர்டில்ஸ் ஆகியவைகளைக் கொண்டது. 496. சிவப்பாக மாறும்.




அமாவாசையன்று சந்திரன்
ஏன் வருவதில்லை?
அன்னிக்கு இருட்டாக
இருக்குமில்லியா? சந்திரனுக்குப்
பயமாக இருக்காதா?


ஏண்டா கண்ணு, என் முகத்தையே
இப்படி உற்றுப் பார்க்கிறாய்?
அப்பா முகத்திலே அசடுன்னு எழுதி
ஒட்டியிருக்கும்னு அம்மா சொன்னா.
அதைத் தான் பார்க்கிறேன்.
— ஏ. ஸ்ரீதர்


உங்கள் வீட்டில் குழந்தைகள்
அதிகமோ?
ஆமாம், உங்களுக்கு எப்படித்
தெரியும்?
நீங்கள் திருப்பித் தரும் புத்தகங்களில்
சில பக்கங்களைக் காணோம்; சில
பக்கங்களில் பல்லால் கடித்த
அடையாளமிருக்கிறது.
அப்புறம்...?
சில பக்கங்களில் 'அம்மா சமத்து,
அப்பா மக்கு'ன்னு எழுதியிருக்கு!


ஆறு எப்படி உண்டாகிறது?
ஒன்பதைத் தலை கீழாகத்
திருப்பிப் போட்டதினால்
உண்டாகிறது சார்!
—திருச்சி ராஜமோகன்

சிரிக்கச் சிரிக்க!


ஏண்டா பாலு அழறான்? சாக்லேட்
கொடுக்கிறது தானே?
அவனுக்குச் சாக்லேட் வேண்டாமாம்
திங்கறதுக்கு 'சாக்கட்டி தான்
வேணும்'னு அழறான்.


கோபு, உகாண்டா எந்த கண்டத்தில்
உள்ளது?
நித்திய கண்டத்தில சார்!
— என். ஜனார்த்தனன்



...ள்ளுவர் இப்போது உயிரோடி
...ந்தால் ஜனங்கள் அவரைப்
...ற்றி என்ன சொல்லுவார்கள்?
...லகத்தில் உயிரோடிருக்கும்
...மனிதர்களிலே மிக மிக வயதானவர்
...என்று சொல்லுவார்கள் சார்.
இது பாக்கெட் டிரான்ஸிஸ்டரா?
இது பிக்பாக்கெட் டிரான்ஸிஸ்டர்!
...ஏன்டி, நம்முடைய குட்டி
...எங்கே?
...யோ! யாரோ 'பாக்கெட்'
...அடிச்சுட்டாங்க போலிருக்குது!.
— கமலைக் கண்ணன்
குடி வந்து நாலு மாதமாகியும்
வாடகையே கொடுக்கவில்லையே?
நீங்க தானே, இந்த வீட்டைச்
சொந்த வீடு மாதிரி பாவித்துக்
கொள்ளச் சொன்னீர்கள்.
...ங்கள் ஓட்டப் பந்தயத்தில் முதல்
...ரிசு வாங்கியதன் ரகசியம் என்ன?
...ன் சாப்பிடும் ஓட்டலில் கொள்ளுச்
...ட்டினிதான் அரைப்பார்கள்.
தாய் மொழி என்று எப்படிப்
பெயர் வந்தது?
வீட்டில் அம்மா மட்டுமே
பேசுவதால் தான் இருக்குமோ
சார்.
— குஞ்சு



காளை ஓடியது


கிரேக்க நாட்டின் நடு நாயகமாக விளங்குவது ஒலிம்பஸ் மலை. கடவுளர்களின் கடவுளான ஜூபிடரின் இருப்பிடம் இதுதான். கம்பீரமான உருவம். ரொம்பப் பிடிவாதக்காரரர். முன் கோபக்காரரும் கூட. நீண்ட தலைமுடி, சுருள் சுருளான தாடி — இதுதான் ஜூபிடர்.

ஜூபிடருக்குக் கோபம் வந்தால் வானம் அதிரும்படி இடி இடிக்கும். பூமி நடுங்கும். புராதன கிரேக்கர்கள் ஜூபிடரைப் போற்றி வழிபட்டார்கள். நாடெங்கும் அவருக்குக் கோயில் கட்டினார்கள். இத்தகைய கோயில்களில் ஒன்று ஒலிம்பியா என்ற நகரில் இருந்தது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை கிரேக்கர்கள் இந்தக் கோயிலில் வந்து கூடுவார்கள். ஜூபிடர் கடவுளுக்கு விழா எடுப்பார்கள். அப்போது பல விளையாட்டுக்கள் நடைபெறும். ஒலிம்பிக் விளையாட்டுக்களின் ஆரம்பம் இதுதான்.


கடவுளானாலும் அவருக்குப் ஆசாபாசங்கள் கிடையாதா என்ன? மனைவிகள் உண்டு, காதலிகளும் உண்டு. ஒரு கடவுளுக்குப் பல மனைவிகள் உண்டு. ஒரு கடவுளுக்குப் பல மனைவிகள் இருந்தாலும் கிரேக்கர்கள் அதை யெல்லாம் பெரிதாகக் கருதுவதில்லை. கடவுளர்களின் கடவுளான ஜூபிடரும் இதற்கு விதிவிலக்கில்லை.

ஒரு சமயம் ஜூபிடரின் பார்வை ஓர் அழகிய பெண்ணின் மீது விழுந்தது. அவளை எப்படியும் அடைந்து விடுவது என்று தீர்மானித்தார். உடனே கம்பீரமான காளை வடிவத்தை எடுத்துக் கொண்டார். ஏன் தெரியுமா? நிஜ உருவத்துடன் வேறொரு பெண்ணுடன் பேசினால் சொந்த மனைவி சீறி விழ மாட்டாளா? இந்த மனைவி பயம் கடவுள்களையும் விடவில்லை என்பதற்கு ஜூபிடரின் காளை வேஷமே சாட்சி.

அந்தப் பெண் பூவுலக மன்னர் ஒருவரின் மகள். அழகே வடிவானவள். காளையாக ஜூபிடர் ஒலிம்பஸ் மலையிலிருந்து இறங்கி வந்தபோது அவள் மலையடிவாரத்திலிருந்த பசும் புல்வெளியில் ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருந்தாள். காளையைக் கண்ட கன்னி இளவரசி அதன் கம்பீரமான தோற்றம் கண்டு மயங்கினாள். காளை அவள் அருகில் வந்தது. சாதுவாக அவள் முன் தன் மிருதுவான கழுத்தை நீட்டியது. அன்போடும் வாஞ்சையோடும் அதைத் தடவிக் கொடுத்தாள். இவ்வளவு பெரிய காளை இத்தனை சகஜமாகத் தன்னிடம் பழகுவதைக் கண்ட அந்த இளவரசிக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அது மட்டுமல்ல; அவள் அதன் முதுகில் ஏறி அமர்ந்தபோதும் கூட அது முரண்டு பிடிக்காதது அவளுக்கு வியப்பாக இருந்தது. இளவரசி தன் மீது ஏறி அமர்ந்ததும் ஜூபிடரான காளை குபீரென்று நாலு கால் பாய்ச்சலில் ஓடலாயிற்று. புல்வெளிகளையும் கானகங்களையும் அலட்சியமாகத் தாவிக் குதித்துத் தாண்டி ஓடியது. அதன் குளம்புகள் தரையில் படும்போதெல்லாம் எத்தகைய ஒலி எழும்பியது? காளையின் முதுகில் பூப்போன்ற அந்தப் பெண் அப்படியே ஒட்டிக் கொண்டது போல் அதன் கழுத்தைக் கட்டிக் கொண்டு படுத்து விட்டாள். ஆரம்பத்தில் இருந்த மகிழ்ச்சி மறைந்து இப்போது அவள் உடல் பீதியினால் நடுங்கலாயிற்று. காடு மலை, வனாந்தரங்களைக் கடந்து காளை



ரமேஷ் சொன்னது சரிதான். என் பாக்கெட்டிலிருந்து பத்துப் பைசாவைக் காணுமே. முகம் ஒட்டடை போலிருக்கு... ம்... இருந்தாலும் ஏப்ரல் ஃபூல் ஆகிடல்லே.
பாலு, உன் முகமெல்லாம் ஏன் இப்படி ஒரே சிவப்பா இருக்கு? சாயம் பூசின்டது போல! ஓடிப் போய்க் கழுவிக் கொண்டு வா, போ!
வா... வா! இரண்டாவது தடவையாக நான் இதைக் கேட்கிறேன். என்னை இன்னிக்கு யாராலும் ஏப்ரல் ஃபூல் ஆக்க முடியாது சார்.
இடியட், நீ எப்பவுமே ஃபூல் தானே. உன்னை ஏப்ரல் ஃபூலாக்கணுமா என்ன? இதோ இந்தக் கண்ணாடியிலே பாத்துக்கோ உன் முகரக் கட்டையை.
ஆமா! அப்படின்னு அப்பா என்னை முட்டாளாக்கிட்டார். பாத்ரூமிலே இருந்த புது சோப்போட வேலைதான் இது!
மகா கனம் பொருந்திய பாலு அவர்களே! இனிமேலாவது எழுந்துபோய் முகத்தைக் கழுவிக்கிட்டு வாரீங்களா?
ஆகட்டும் சார்!...
அந்தப் பக்கமாகத் தலைமையாசிரியர் வர..
ஏண்டா பயலே, இப்படியா கண் மண் தெரியாமல் ஓடி வாரது? என் கண்ணாடி எங்கே? அடப்பாவமே கீழே விழுந்ததிலே காயம்பட்டு... தம்பி, உன் முகமெல்லாம் ஒரே ரத்தமாயிட்டுதே. அடாடா! ஓடு... ஓடு... உடனே ஃபஸ்ட் எய்டு எடுத்துக்கிட்டு வீட்டுக்குப் போ. ஸ்கூலுக்கு வர வேண்டாம். ...போ.
ஹெட்மாஸ்டருக்குச் சாளேசரம்! கண்ணாடி இல்லாத நிலையிலே என் முகச் சிவப்பை ரத்தம்னு நெனச்சுட்டார். அப்பா என்னை ஏப்ரல் முட்டாளாக்கினதும் நல்லதாப் போச்சு. லீவு கிடைச்சதே இன்னிக்கு!


போன வருஷம் பாலுப்பயல் என்னே ஏப்ரல் முட்டாளாக் கிட்டான். இந்த வருஷம் அவனை முட்டாளாக்க ஒரு ப்ளான் வைச்சிருக் கேன்.
ஓஹ்... ஹோ... ஹோஹ்... ஹோ! அப்படியா சங்கதி. ஐயா எச்சரிக்கையா இருப்பார்...
31
ஏப்ரல் முதல்தேதி காலை
அப்பா காசைக் கீழே போட்டுட்டுப் போறீங்களே...!
ஓ....!
...ஹா..! ஏப்ரல் ஃபூல்... ...ந்தக் காசு எடுக்க வராது. ...ரையிலே பதிச்சிருக்கேன்!
BATHROOM
குளியலறை
அப்பா, டாட்டா! ஸ்கூல் போய் வரேன். உங்களை இன்னிக்கு ஏப்ரல் ஃபூல் பண்ணியாச்சு. அது என்னை நீங்க ஃபூல் பண்ணவில்லை, பண்ணவும் முடியாது!
ஆ, அப்படியா? வீட்டுக்கு வாருலே, அப்பா தெரியும் என்னாலே முடிஞ்சுதா இல்லையான்னு.
...பாலு! என்னடா ...ன் மூஞ்சி எல்லாம் ...ரே சிவப்பு?
தம்பி இன்னிக்கு என்ன தேதின்னு எனக்குத் தெரியும். என்னை முட்டா ளாக்க உன்னாலே முடியாதுப்பேன்.
பாலு, உன் பாக்கெட்டி லிருந்து பத்து பைசா கீழே விழுந்திருக்கு பார்.
இது ரொம்பப் பழைய ஐடியாடா. இதுக் கெல்லாம் ஐயா ஏமாறமாட்டார்.

கடலருகே வந்தது. அங்கேயாவது நின்றதா? அதுதான் இல்லை. கடலுக்குள் இறங்கியது. நிலத்தில் எத்தனை வேகமாக ஓடியதோ, அதே வேகத்துடன் கடலிலும் நீந்தியது காளை.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஜூபிடர் தம் நிஜ உருவத்துக்கு மாறினார். அந்த அழகியின் வியப்புக்கோ எல்லையே இல்லாமலிருந்தது. கடவுளர்களின் கடவுளாகிய ஜூபிடர்தான் தனக்காகக் காளையாக வந்தவர் என்பதை அறிந்த அவளுக்கு மகிழ்ச்சி, பெருமை ஏன், கர்வமாகக் கூட இருந்தது. ஜூபிடர் அவளுடன் இனிமையாகப் பேசிக் கொண்டே நீந்தினார். இப்படி நெடுநேரம் நீந்தி நீந்தி ஓர் இடத்தில் கரை ஏறினார் ஜூபிடர். அது ஒரு புதிய நிலப்பகுதி. இதுவரை யாரும் அங்கு போனதில்லை. தம் காதலியை ஜூபிடர் அந்தப் புதிய நிலப் பகுதியில் குடியமர்த்தினார். அந்த நிலப் பகுதிக்கு அவள் பெயரையே சூட்டினார். அவள் பெயர் என்ன தெரியுமா? யூரோப்பா என்பதுதான் அவள் பெயர். இன்றைய ஐரோப்பா அந்த அழகியின் பெயரால் உருவாக்கப் பட்டது தான். ஐரோப்பா தோன்றிய வரலாறு இது தான்.

இளவரசி யூரோப்பாவின் சகோதரர்கள் மூவர். தங்கள் சகோதரியைக் காணாது கவலை கொண்ட மூவரும் அவளைத் தேடக் கிளம்பினார்கள். எங்கெங்கோ தேடியும் பலன் இல்லை. மூவரில் இருவர் நம்பிக்கை இழந்து தேடுவதைக் கைவிட்டனர். மூத்த சகோதரன் காட்மஸ் மட்டும் மனம் தளரவில்லை. தேடிக் கொண்டே அலைந்தான். சகோதரியிடம் அவனுக்குள்ள பற்றுதலைக் கண்டு மகிழ்ந்த ஜூபிடர் அவனை மகிழ்விக்க ஓர் அழகிய பெண்ணைப் பரிசாகக் கொடுத்தார். காட்மஸ் அவளை மணந்து கொண்டான். சகோதரியைத் தேடுவதை அவனும் கைவிட்டான். தனக்கு மனைவி கிடைத்த அந்த இடத்தில் ஒரு புதிய நகரத்தை நிறுவ ஆசை கொண்டான் காட்மஸ். ஆனால் அந்தப் பிரதேசத்தை ஒரு பயங்கரமான டிராகன் (ராட்சத மிருகம்) ஆக்கிர



மித்துக் கொண்டிருந்தது. அங்கு நகரம் நிறுவ வேண்டுமானால் முதலில் அதைக் கொன்றாக வேண்டும்.

காட்மஸ் நல்ல வீரன். டிராகனோடு போராடி அதன் தலையை வாளினால் வெட்டும்போது வானிலிருந்து ஒரு குரல் ஒலித்தது. ''அந்த மிருகத்தின் பற்களைப் பிடுங்கிப் பூமியில் நடு!'' என்று. அந்தப் பற்களிலிருந்து பயங்கரமான ராட்சதர்கள் தோன்றலானார்கள்.

எப்படி இருக்கும் காட்மஸுக்கு? அசரீரி மறுபடியும் ஆணை யிட்டது. ''உன்னை விழுங்குவதற்காக ஓடிவரும் ராட்சதர்கள் மீது கற்களை வீசு!'' அதன்படியே செய்தான் காட்மஸ். அரக்கர் கூட்டம் தங்களில் யாரோ தான் தங்கள்மீது கற்களை வீசுவதாகக் கருதி அவர்களே ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்ளலானார்கள். முடிவு? ஐந்து பேர்களைத் தவிர மற்றவர்களெல்லாம் மடிந்தார்கள்.


காட்மஸ் உடனே இந்த ஐந்து ராட்சதர்களையும் தன்னுடைய பலத்தினால் அடக்கி அடிமையாக்கிக் கொண்டான். அவர்களுடைய உதவியினால் புகழ் பெற்ற கிரேக்க நகரமான தெபஸை (Thebes) உருவாக்கினான். தெபஸ் நகரம் ஏற்பட்ட கதை இது. —விகேயெம்





இப்படி ரெண்டு பேரும் முகத்தைத் தூக்கிட்டு இருந்தா காரியம் நடக்கிறது எப்படி?

புகைப்படம்: ஆர். ஹரிகோபால்




சாகசத்துக்கு இதோ ஒரு டிக்கெட்!


இந்திரஜாலக் காமிக்குகள் — ஆயிரக்கணக்கான சிறுவர்களை மெய்சிலிர்க்க வைக்கும் மாதமிருமுறை வெளிவரும் பத்திரிகை — சிறுவர்கள் என்ன, பெரியவர்களையும் கூட கவர்ந்துள்ளது இது — ஃபாண்டம் என்ற இறவாத பூதத்தின் சாகசச் செயல்களைப் படித்து அனுபவியுங்கள். ஃபாண்டம், மண்ட்ரேகா, மற்றும் பலர் தீமையை எதிர்த்து புரியும் செயல்களில், சாகசம், தீரம், துடிப்பு, ஸஸ்பென்ஸ், எல்லாம் உள்ளன.

ஆங்கிலம், இந்தி, மராத்தி, குஜராத்தி தமிழ், வங்காளம் — ஆகிய ஆறு மொழிகளில் பிரசுரிக்கப்படுகிறது. எந்தக் குழந்தையும் இந்திரஜாலக் காமிக்குகளைப் படிக்கத் தவறக்கூடாது.

இந்திரஜாலக் காமிக்ஸ்

A Times of India Publication





'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: சதாசிவம்

சந்தா விவரம்: ஒரு வருடம் ரூ. 7-00 ● ஆறு மாதம் ரூ. 3-50 ● வெளிநாடுகள் ரூ. 18-00


ருசியானவை... அருமையானவை... பிரமாதமானவை.
30 பைசாதான்!
PARLE
POPPINS
MIXED FRUITY SWEETS
30 Paise
புதிய
பார்லே
பாப்பின்ஸ்
பழரச மிட்டாய்கள்
எலுமிச்சை, ஆரஞ்சு, சாத்துக்குடி, அன்னாசி மற்றும்
ராஸ்ப்பெர்ரி ஆகிய ஐந்து பழரசச் சுவைகளில்
ருசிமிக்க 13 மிட்டாய்கள்—குறைந்த விலைகொண்ட
கையடக்கமான பேக் ஒவ்வொன்றிலும்!
பாப்பின்ஸ் சுவையுங்கள்— பழரசச் சுவையை அனுபவியுங்கள்